Registered as a Newspaper பக்கங்கள் 6 விலை ரூபா 5-00

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்


# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 13 (26.4.94) செவ்வாய்க்கிழமை ஓசை 67


## கொடிய விசமுடைய பாம்பு வகை கண்டுபிடிப்பு

நாகபாம்பையும் புள்ளியுள்ள விரியன் பாம்பையும்விட கொடிய விசமுடைய ஒரு பாம்பு வகை இலங்கையிலிருப்பதாக விசநோய் நிபுணர் ஒருவர் கூறியுள்ளார். இவர் அயன மண்டல மருத்துவ சுகாதாரம் தொடர்பாக றோயல் சங்கத்தில் சமர்ப்பித்த ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையில், அந்தவகைப் பாம்புகள் கடித்தோரை குணப்படுத்த விசமுறிவுகள் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார். இந்தப்பாம்பு இனம் வழக்கமாக ஈரவலயத்தில் கூரைகளிலும் தென்னைமர உச்சிகளிலும் காணப்படுவதாக கூறப்படுகிறது செயற்கைச் சுவாசமளிக்கும் வசதியுடைய உபகரணங்களையுடைய ஆஸ்பத்திரிகள் தவிர்ந்த வேறுவழி (6 ஆம் பக்கம் பார்க்க)

# செட்டிகுளத்தில் ஒப்பரேசன் ஜயமக

## மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல் இராணுவம் தொடங்கியது

(கொழும்பு)

**வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவம் புதிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளது. ஒப்பரேசன் ஜயமக [வெற்றிப்பாதை] எனப் பெயரிடப்பட்ட இவ் இராணுவ நடவடிக்கை ஒரு மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல் திட்டம் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் பகுதியில் இராணுவத்தினர் ஒபரேஷன் ஜயமக எனும் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வவுனியாவில் இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டு நிலப்பரப்பை மேலும் அதிகரிக்கவே இப் பணி மேற்கொள்ளப்படுவதாக இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா தெரிவித்தார்.

இந்த இராணுவ நடவடிக்கை இராணுவத் தளபதி ஜெரி டி சில்வாவின் வழிகாட்டலின் கீழ் நேற்று பிற்பகல் ஆரம்பமானது. படையினர் தமது முன்னிலை நிலைகளை இந் நடவடிக்கை மூலம் தற்போது 35 சதுர கிலோ மீற்றர்களால் விஸ்தரித்துள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். விவசாய குடும்பங்களை இந் நடவடிக்கை மூலம் மீட்பதே தமது நோக்கம் எனசிறிலங்கா பாதுகாப்புஅமைச்சு தெரிவித்தது

இதேசமயம் செட்டிகுளம் பகுதியில் கடந்த சில நாட்களாக பெருமளவு இராணு (6ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவ தீர்வு காண முயன்றால் விளைவுகள் விபரீதமாகும்

### துறைசார் வல்லுநர்கள் வலியுறுத்து

## கிழக்கில் படையினரால் பொதுமக்கள் கொலை

மட்டக்களப்பு மாவட்டம் பாலகோட்டபடுப் பகுதிக்கு கடந்த 22 - ம் திகதி வந்த விசேட அதிரடிப்படையினர் ஒரு பொது மகனை சுட்டுக் கொன்றுள்ளனர். முனைக்காடு கொக்கட்டிச் சோலையைச் சேர்ந்த சினித்தம்பி மூத்ததம்பி (வயது 21) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இதே வேளை திருகோணமலை மாவட்டம் மூதூர் 59 - ம் கட்டை 10-ம்கண்டத்தில் கடந்த 21ம் திகதி இரவு 7 00 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் ஒரு பொது மகனைச் சுட்டுக் கொன்றுள்ளனர் 58 ம் கட்டையைச் சேர்ந்த நாகூர் (வயது 55) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

## சிங்கள மீனவர் கேரள சிறையில் தடுப்பு

(கொழும்பு)

இந்திய கடற்பகுதியினுள் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை இந்திய கடற்படையினால் கைதான 11சிங்கள மீனவர்களினதும் உறவினர்கள் அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி விஜேதுங்காவை கேட்டுக் கொண்டுள்ளனர்

நீர்கொழும்பைச் சேர்ந்த இம்மீனவர்கள் கடந்த வருட டிசம்பரில் இந்திய கடற்படையினால் கைது செய்யப்பட்டனர்; இவர்கள் தற்போது கேரள சிறைச்சாலை ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## ஐதேகபிரதி செயலாளருக்கு கொலைப் பயமுறுத்தல்

(கொழும்பு)

ஐ.தே.கவின் பிரதிச் செயலாளரான சுசில் முனசிங்காவிற்கு பல பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. காமினி திஸநாயக்காவை அமைச்சரவையில் சேர்ப்பதற்கு ஐ.தே.கவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகையில் அதற்கெதிரான குழு ஒன்று இந்தப்பயமுறுத்தல்களை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## குடிபோதையில் காணப்பட்ட இலங்கையருக்கு சிறை

(துபாய்)

துபாயிலுள்ள குற்ற நீதிமன்றம் அண்மையில் 52 வயதான இலங்கையைச் சேர்ந்த ஏ. மன்சூர் என்பவருக்கு குடிபோதையில் காணப்பட்டதற்கும் வாகனத்திலிருந்து ஒரு ... டொலர் அபராதமும் விதித்தது.

மேலும் இது பற்றித் தெரிய வருவதாவது; துபாய் ஜீமெய்ரா வீதியில் வாகனங்களை நிறுத்தும் இடத்தில் குளிர்சாதனம் பொருத்திய வாக ...

## முதன்மை ஆசிரியர்கள் பதவிக்கு விண்ணப்பிக்குக

யாழ்ப்பாணம்வலயம் 02-ல் அமைந்துள்ள 8 கோட்டங்களில் வெற்றிடமாக உள்ள பதவணிகள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றிற்கு தகுதியான ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் யாவும் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும் இதற்கான எழுத்துப் பரீட்சை 14-05-94 இல் நடைபெறும்.

கோட்ட ரீதியாக பின்வரும் பாடங்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன என வலயம் 2 கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

[6ஆம் பக்கம் பார்க்க]

## செப்டிசீமியா சிகிச்சைகளம் தொற்று நீக்கம் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ், போதனா வைத்தியசாலையில் செப்டிசீமியா சிகிச்சைக் களத்தைத் தொற்று நீக்கம் செய்யும் நடவடிக்கைகள் நேற்று முடிவடைந்ததாகவும் இன்னும் ஓரிரு தினங்களில் மீண்டும் மேற்படி சிகிச்சைக் களம் திறக்கப்படும் எனவும் தெரிய வருகிறது.

நோய்க்கிருமிகள் சிகிச்சை களத்தில் இருந்து பலவீனமான நிலையில் உள்ள நோயாளர் மீது வேகமாக தாக்கலாம் என்பதனாலேயே இம் முயற்சி மேற் கொள்ளப்பட்டமையும் இதுவொரு பரீட்சார்த்த நடவடிக்கையாக மேற் கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது,

மூன்று தினங்களாகதொற்று நீக்கம் நடைபெற்றதாகவும் எதிர்காலத்தில் செப்டிசீமியா தாக்கம் இதன் மூலம் குறைவடையலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது,

இதேவேளை செப்டிசீமியா பெருக்கத்தைக் கட்டுப்படுத்தப் பாவிக்கப்படும் 'ஏகர் பிளேட்' (Agar Plate) எடுத்து வருவதில் சிக்கல் தோன்றி இருப்பதாகவும் மேலும் சில காலம் இங்கு ஏகர் பிளேட் வருவது தாமதமாகும் எனவும் தெரிய வருகின்றது, (நி க)

## ஏழுமலை கொலையை கண்டித்து உண்ணாவிரதம்

(சென்னை)

கோபாலசாமியின் ஆதரவாளரான ஏழுமலை கொல்லப்பட்டதைக் கண்டித்து நேற்று தமிழகத்தின் பல இடங்களிலும் உண்ணாவிரதப் போராட்டங்களும் ஆர்ப்பாட்டப் பேரணிகளும் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. தி.மு.க. விலிருந்து பிரிந்து இயங்கும் வை... லை சென்னை ராமபுரம் பகுதியில் உள்ள அவரது இல்லத்திற்கு சமீபமாக வைத்து இருபதுபேர் வரை அடங்கிய ஒரு குழுவினால் கடந்த 19-ம் திகதி வெட்டிக் கொல்லப்பட்டது தெரிந்ததே.

இக்கொலையைக் கண்டித்தே வை. கோ. அணியின் ஆதரவாளர்கள் இவ் ஆர்ப்பாட்ட ...

போதையி காணப்பட்டதற்கும் வாகனத்திலிருந்து ஒரு தொகை மீனை களவெடுத்ததற்கும் என ஒரு மாதச் சிறைத் தண்டனையும் 150 நிறுத்தும் இடத்தில் குளிர்சாதனம் பொருத்திய வாகனம் ஒன்றில் மீன்வகைகளுடன் வாகனசாரதி வாகன

[6ஆம் பக்கம் பார்க்க]

# இந்திய தூதரகம் முன் மோசடிப் பேர்வழிகள்

(கொழும்பு)

கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலய அலுவலகத்துக்கு வெளியே செயற்படும் தரகர்கள் இந்திய விசா பெற்றுத் தருவதாகக் கூறி விசா பெற்றுக் கொள்ள வருபவர்களை ஏமாற்றிப் பணம் பறிப்பதாக இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த மோசடிப் பேர்வழிகள் தரகர்கள் பற்றி எச்சரிக்கையாக இருக்குமாறு பொதுமக்கள் கேட்கப்படுகிறார்கள்.

இந்திய விசா பெறுவதற்கான நெறி முறைகள் குறித்து தெளிவாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது. வழமையான வழிமுறைக்கு புறம்பாக விசா

[6ஆம் பக்கம் பார்க்க]

# துபாய் கடலில் மூழ்கி இலங்கையர் மரணம்

(கொழும்பு)

துபாய் நாட்டில் ஜீமெய்ரா எனும் பகுதியில் உள்ள கடலில் குளிக்கச்சென்ற இலங்கையைச் சேர்ந்த 50வயதான என். மன்டேன் என்பவர் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார். அண்மையில் மேற்படி பகுதியில் இப்படிப்பட்ட சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும் தனது நண்பர்களுடன் கடலுக்குக் குளிக்கச் சென்ற சம்பந்தப்பட்ட நபர் கடலின் ஆழத்திற்குச் சென்றதாகவும் மாலை நேரமானதால் ஏற்பட்ட கடல் அலைகளுக்குத் தாக்குப் பிடிக்காது அடித்துச் செல்லப்பட்டதாகவும் பொலிஸ் விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

## துறைசார் வல்லுநர்கள் வலியுறுத்து

(கொழும்பு)

வடக்குகிழக்குப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியான தீர்வு சாத்தியப்படாது என்றும் மேற்படி பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் அதன் மூலமான விபரீத விளைவுகள் குறித்தும் இராணுவத்தளபதி உட்பட பல ராணுவ அதிகாரிகளுக்கு தென்பகுதித் துறைசார் வல்லுநர்கள் எடுத்து விளக்கியுள்ளனர்.

தென்பகுதித்துறைசார் வல்லுநர் அமைப்பின் உயர் அதிகாரிகள் கடந்த வாரம் இராணுவத்தளபதி ஜெரி டிசில்வாவையும் ஏனைய உயர் இராணுவ அதிகாரிகளையும் சந்தித்தனர்.

இச்சந்திப்பின் போது மேற்படி விடயங்கள் குறித்து விரிவான முறையில் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர். இராணுவ நடவடிக்கை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதன் கடினத்தன்மையை துறைசார் வல்லுநர்கள் எடுத்து விளக்கியதாகவும் கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(க, நி)

# ராணுவத்தின் எண்ணிக்கையை வடக்கில் 60,000ஆக உயர்த்தமுடிவு

(கொழும்பு)

வடபகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினரின் எண்ணிக்கையை 60 ஆயிரமாக அதிகரிக்கும் நோக்கில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதைவிட கிழக்கு மாகாணத்தில் கடந்த மூன்று வருடமாக 7 நிரந்தர படாலியன்களும் 5 தொண்டர்படை பட்டாலியன்களும் வேறு சில படைப்பிரிவுகளும் நிலைகொண்டிருந்தன. கடந்த சில வாரங்களில் 6 நிரந்தர இராணுவ பட்டாலியன்களும் 4 தொண்டர் படைப்பிரிவு பட்டாலியன்களும் அதிரடிப்படையினரும் அவசர அவசரமாக வாபஸ் பெறப்பட்டு திருமலைக்கு அனுப்பப்பட்டன.

இவர்கள் திருமலையிலிருந்து கப்பல்கள் மூலம் வடபகுதி முகாம்களுக்கு அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் கஜபாகு முதலாம் பிரிவு, நாலாம் பிரிவு, கெமுனு முதலாம் பிரிவு, சிங்க ரெஜிமன்ட் நாலாம் பிரிவு, கெமுனு ஏழாம் பிரிவு, முன்னிலைப் படையின் 7ஆம் பிரிவு, சிங்க ரெஜிமன்ட முதலாம் பிரிவு ஆகியவை உட்

[6ஆம் பக்கம் பார்க்க]

## ஆதரவாளர் வீரச்சாவு

மாவடி முன்மாரிப் பிரதேசம் வட்டியாமடு பகுதியை கடந்த 19-ம் திகதி முற்பகல் 11. 30 மணியளவில் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் சுற்றி வளைத்துத் தாக்கியதில், விடுதலைப் புலிகளின் முழுநேர ஆதரவாளர் ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த நான்கு பிள்ளைகளின் தந்தையார் வெள்ளைக் குட்டி வேலுப்பிள்ளை (வயது 35, சேனைக் குடியிருப்பு, கல்முனை அம்பாறை) என்பவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

கப்படுகிறது. தி, மு, க. விலிருந்து பிரிந்து இயங்கும் வை. கோபாலசாமியின் அணியின் முக்கிய பிரமுகரான ஏழும ஆதரவாளர்கள் இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் உண்ணா விரதங்களையும் மேற்கொண்டனர்.

தமிழ் நாடு அரசு

# கடற்கரை பாதுகாப்பு படை புதிதாக அமைக்க முடிவு

(சென்னை)

தமிழகத்தில் புதிதாக கடற்கரைப் பாதுகாப்புப் படை ஒன்றை அமைகக மாநில அரசு திட்டமிட்டுள்ளதாக தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

சட்டசபையில் நடைபெற்ற விவாதமொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். 12 கோடி ரூபா செலவில் அமைக்கப்படும் இக் கடற்கரை பாதுகாப்புப்படை வெளிநாட்டார் ஊடுருவலையும், கள்ளக்கடத்தல். மற்றும் மீனவர் பாதுகாப்பில் ஈடுபடும் என தெரிவித்தார்.

# அகதிகள் மீளக்குடியேற்றம் ஐ.நாவின் செயற்பாடுதவறு

(யாழ்ப்பாணம்)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் வடக்கு - கிழக்கு அகதிகளை மீளக் குடியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள விதம் குறித்து யாழ் அதிகாரிகள் சிலர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

அகதிகளை மீளக் குடியேற்றும் போது அவர்களின் இருப்பிட வசதிமற்றும் ஏனையவை தொடர்பாக ஆராய வேண்டும என்றும் அகதிகள் தங்கியிருக்கும் இடம்சென்று நேரடியாக அகதிகளுடன் கலந்து ஆலோசனை செய்யவேண்டும் என்றும் அதிகாரிகள் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

யாழ் குடாநாட்டிற்கு அழைத்து வரப்பட்ட அகதி

[6ஆம் பக்கம் பார்க்க]

# தொண்டா - செல்லா முரண்பாடு தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை

இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான தொண்டமானுக்கும் செல்லச் சாமிக்கும் இடையில் நிலவும் உட்பூசலுக்கு தீர்வுகாண அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொண்டமான் - செல்லச்சாமி மோதலை தீர்த்துவைக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அரசசட்ட அமைச்சர் சொக்ஸி ஜனாதிபதி விஜேதுங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார் அமைச்சர் சொக்ஸி இருவரையும் தனித்தனியே சந்தித்து நீண்ட நேரம் பேச்சுநடத்தியுள்ளார்.

எதிர்வரும் தேர்தலின் போது இ தொ. காவின் ஆதரவை ஐதேக பெற்றுக் கொள்ளும் முயற்சியாக இது அமைவதாக தெரிவிக்கப்படுகப்படுகிறது. இவர்களிடையிலான பூசலை எதிர்வரும் ஜூலை மாதத்திற்கு முன் தீர்த்துவைக்கஅரசு முயற்சிகள் எடுத்து வருகிறது

இதேசமபம் இ. தொ, கா- ஐ. தே. க உறவை வளர்ப்பது தொடர்பாக அண்மையில் தொண்டமானும் ஜனாதிபதி விஜேதுங்காவும் பேச்சுகள் நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

# இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்

# பிரபாகரனுக்கான அஷ்ரப்பின் கடிதம் ஐ. தே. கவை மிரட்டும் நடவடிக்கை

(லண்டன்)

கிழக்கு மாகாணத்தில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அதன் முடிவை நிர்ணயிப்பதாக முஸ்லிம்களின் வாக்குகளே உள்ளன எனவே விடுதலைப்புலிகளின்தலைவர் வே. பிரபாகரனுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் கடிதம் எழுதியதன் நோக்கம் அரசாங்கத்தை மிரட்டுவதே என பி. பி. ஸி. சிங்கள சேவையின் செய்தியாளர் எல். மோ. பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் ஒரு பொதுவான அரசியல் தீர்வு முன்வைக்கப் படவேண்டும் எனவும், தமிழ்-முஸ்லிம் மக்களிடையே ஓர் இணக்க நிலை தோன்ற வேண்டுமெனவும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய பகிரங்க கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரேமதாசாகாலத்தில் முஸ்லிம் காங்கிரசிற்குக்கிடைத்த சலுகைகள் டி, பி, விஜேதுங்கா ஆட்சியில் கிடைக்கத் தவறினால் சர்வசன வாக்கெடுப்பின் போது அரசாங்கம் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகும் என அச்சுறுத்துவதே

[6ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### அணுசக்தி முன்னேற்றப்பாதையா? முட்டுக்கட்டையா?

பிரச்சினைகள், பயன்கள் விளைவுகள், அணுவின்விலை, அணுவாயுத அதிகரிப்பு, இன்னும் பல அணுபற்றிய கட்டுரைகளுடன் விற்பனையாகிறது வசந்தம் புத்தக நிலையம்
(8087)

### விதி நாடகம்

உழைப்பாளர் நாளாகிய மே நாளைஇவ்வருடத்திலும், எழுச்சிகரமாக முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. தமிழீழ தேசிய விடுதலையே அனைத்து ஒடுக்கு முறைகளின் தளைநீக்கத்தை உறுதி செய்யும் என்பதைக்கருப்பொருளாகக் கொண்ட மே நாள் எழுச்சி வீதி நாடகங்கள் யாழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கலைபண்பாட்டுக் கழகத்தினராலும், கிராமிய உழைப்பாளர் சங்கத்தினராலும் நடத்தப்பட்டு வருகின்றன.

### ஒத்திவைப்பு

யாழ் செயலகத்தில் 26 ஆம் திகதி நடைபெற இருந்த விலங்கு வேளாண்மை அபிவிருத்தி குழு கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### வர்த்தகர் சங்கப் பொதுக் கூட்டம்

பளை வர்த்தகர் சங்கத்தின் பொதுக்கூட்டமும், நிர்வாகிகள் தெரிவும் இன்று பிற்பகல் மூன்று மணியளவில் பளை மகாவித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது

## நோய் கட்டுப்படுத்தல் பற்றி கால்நடை வளர்ப்பு பயிற்சி

கால் நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு கால் நடை வளர்ப்புமுறை நோய்களைக் கட்டுப்படுத்தல் தொடர்பான பயிற்சி வகுப்பு ஒன்று இம்மாதம் நான்காம் திகதி யாழ் மிருக வைத்திய சாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திட்டமிடல் பணிப்பாளர் செ. பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இப் பயிற்சி வகுப்பின் ஆரம்ப நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதிநிதிகள் உட்பட கால்நடை சுகாதார அபிவிருத்தித் திணைக்கள வைத்தியர்களும் கலந்துகொண்டனர்.

பிரதேச செயலர் பிரிவு மட்டத்தில் 2-ம் கட்டமாக நடைபெற்ற இப் பயிற்சி வகுப்பை வெகு விரைவில் கிராம மட்டத்திலும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கையைமேற்கொள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்கால்நடைச் சுகாதார திணைக்களத்துடன் இணைந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

## விவசாயப் பிரிவு ரீதியாக விவசாயப் பயிற்சிவகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவனமும், விவசாயத் திணைக்களமும் இணைந்து மாதாந்தம் நடாத்தும் விவசாயப் பயிற்சிவகுப்புக்கள் இன்று சுண்டுக்குழியிலும், கைதடி கிழக்கிலும் இடம் பெறவுள்ளது. காலை பத்து மணியளவில் இவை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்ட இப் பயிற்சி வகுப்புக்களில் பல விவசாயிகளுடன் உற்பத்திக் குழுவினரும் இணைந்து பயன்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது இப்பயிற்சி வகுப்புக்கள் சாவகச்சேரி உடுவில், தொல்புரம் அம்பன், பளை, உரும்பராய், கீரிமலை, நல்லூர், கைதடி சண்டிலிப்பாய், புலோலி விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் நடாத்தப்படுவது தெரிந்ததே

## ஆடை அல. நிலையங்களில் இலங்கை கைத்தறிப் புடவை

(கொழும்பு)

இலங்கையின் கைத்தறிப் புடவைகள் உலகின் பல்வேறு இடங்களிலுமுள்ள ஆடை அலங்கார நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்படவுள்ளன.

கனடா, நெதர்லாந்து, பிரான்ஸ், டென்மார்க், ஜெர்மன் போன்ற நாடுகளுக்கு தரமான கைத்தறிப்புடவைகளையும் ஏற்றுமதி செய்வதற்கு தனியார் துறையின் ஆதரவுடன் புடவைக் கைத்தொழில் அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது,

## வளைகுடா நட்டஈடு ஜூன் மாதத்தில் கிடைக்கும்

வளைகுடா யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 92,000 இலங்கையருக்கும் விரைவில் நட்டஈடு கிடைக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. வரும் ஜூன் மாதமளவில் இந்தக் கொடுப்பனவு கிடைக்கும் எனவும், இதற்காக 900 கோடி ரூபாவரையில் இலங்கைக்கு கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

### யாழ் பிராந்திய சுகாதார சேவை திணைக்கள

## சென்ற வருட இறுதிகாலாண்டு மருந்துகள் கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்- பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தி ... அசமந்த போக்கு காரணமாக இருந்ததாகவும் அந்நிலை தொடருமானால் இவ்வாண் ... எனவே கூடியவகையில் அந்தந் தக்காலாண்டுக்குரிய மருந்து பொருள்களை பெற்றுக் ...

## யாழ்ப்பாணத்தில்கல்விகற்ற டாக்டர்கள் வடபகுதியில் சேவையாற்ற மறுப்பு

யாழ் பல்கலைக்கழகத்தில் பயின்று பட்டம் பெற்றுவெளியேறும் டாக்டர்களில் அனேகர் வடபகுதியில் ஒரு வருட சேவையாற்ற மறுப்பு தெரிவித்துள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர் டாக்டர் எம். சண்முகதாஸ் தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் தற்போதைய டாக்டர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாகத் தான் கட்டாய சேவைபுரிய வேண்டுகோள் விடுத்ததாகவும் ஆனால் இதனை அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டுள்ளார்கள் எனவும் தெரிவித்தார் மேலும் தாம் ஏற்கனவே வேறு இடங்களுக்கு செல்வதற்கு விண்ணப்பம் அனுப்பியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளார்

அடுத்த மாதம் இவ்வாறு தமது படிப்புக்களை முடித்துக் கொண்டு சுமார் இருபத்தியொரு டாக்டர்கள் வெளியேறுவதாகவும் இதில் பத்து டாக்டர்கள் மட்டுமே வடபகுதியில் சேவையாற்ற விண்ணப்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு வடபகுதியில் சேவையாற்ற விருப்பம் தெரிவித்தவர்களில் எட்டுப் பேர் யாழ் போதனா வைத்திய சாலையில் சேவையாற்ற விருப்பம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

இதேவேளை ஏனையவைத்தியசாலையில் உள்ள டாக்டர் பற்றாக்குறை தொடர்ந்து நீடிக்கும் என்றும் இதற்கு ஒன்றும் செய்ய முடியாது இருப்பதாக கவலை தெரிவித்துள்ளார்

ஏனைய வைத்தியசாலைக்கு சேவையாற்ற வைத்தியர்களை சுழற்சி முறையில் யாழ் போதனா வைத்திய சாலை நிர்வாகம் தந்து உதவுவதாக ஒத்துக் கொண்ட போதும் அதற்கு மாதாந்தப் படி யாழ் போதனா வைத்தியசாலை வழங்கும் எனவும் ஆனால் மேலதிக படியை வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சு சுகாதார பிரிவு வழங்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்:

ஆனால் இவ்வாறு வழங்குதல் நிர்வாகச் சிக்கலைக் கொண்டு வரும் என்பதால் ஆளுநருடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும் என தெரிவித்தார் மாதாந்த படியை வழங்குவதானால் தமக்கு தேவையான வைத்தியர்களை பெற முடியும் என தெரிவித்தார் (நி), (பா)

## பல்கலையில் மீன்பிடியியல் அடிப்படைக் கற்கை நெறி

கடந்த 09-04-94 அன்று காலை 9-00 மணியளவில் யாழ் பல்கலைக்கழகத்தில் மீன்பிடியியல் தொடர்பான ஓர் அடிப்படைக் கற்கைநெறி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முன் முயற்சியினால் பல்கலைக் கழக புறநிலைப்படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் திரு. இரா. சிவசந்திரன் அவர்கள் தலைமையில் ஆரம்பமானது.

வடமராட்சி வடக்கு, கிழக்கு, வலி கிழக்கு, வலிதென் மேற்கு, காரைநகர் ஒன்றியம் ஆகிய கடற்தொழில் கூட்டுறவுச் சங்க ஒன்றியங்களைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர்.

அத்துடன் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள், ஆகியவற்றிலிருந்தும் 15க்கு மேற்பட்ட பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர்

இந்நிகழ்வில் தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு: இளங்குமரன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவன கடல்வள அபிவிருத்திப் பகுதியினர், யாழ் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர், கடற்புலிகள் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர், பேராசிரியர் பொ பாலசுந்தரம்பிள்ளை, கலாநிதி கா. சித்திரவடிவேல், கலாநிதி சிவபாலன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்

இக்கற்கை நெறியில் கல்வி பெறும் பயிற்சியாளர்கள், பயிற்சியின் முடிவில் தமது கிராமங்களுக்குச் சென்று அங்கு செயற்படும், கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைந்து மக்களின் சமூக பொருண்மிய மேம்பாட்டுக்காக, உழைக்க வேண்டுமென்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைக்கமைய செயற்பட உள்ளதனால் கிராமமக்கள் இக்கற்கை நெறி மூலம் நன்மை பெற உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்

இக்கற்கை நெறியில் தொடராக ஐந்து வாரங்கள், சனி ஞாயிறு நாட்களில் கடல்வாழ் உயிரினங்கள், பிடிக்கப்படும் முறைகள், பதப்படுத்தல், சேமித்தல், சந்தைப்படுத்தல் போன்ற மீன்பிடியியல் தொடர்பான பல்வேறு விடயங்களில் பயிற்சிகள் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது

## போட்டி

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடத்தும் உற்பத்தி எழுச்சி வாரப் போட்டிகளில் இன்று காலை 8.30 மணிக்கு தமி ...

தனியார் கல்விநிறுவன ஒன்றியம்
யாழ் மாவட்டம்

### பொது நிர்வாக சபைக் கூட்டம்

சகல கோட்ட நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான

**-அறிவித்தல்-**

விடயம்:-
தனியார் கல்வி நிறுவனங்களின் ஒழுங்கு விதிகள் தொடர்பான ஆலோசனைகள்

காலம்:- 27 04 1994 புதன் பி. ப 2.00 மணி

இடம்:- புதிய விஞ்ஞானக் கல்விக் கழகம் (எழிலகம் முன்பாக)

சகல நிர்வாக உறுப்பினர்களையும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுச் செயலாளர்
யாழ் மாவட்டம்

(சி-9262)

### நினைவு கூருகின்றோம்...

**1994-04-26**

1986-ம் ஆண்டு இதேதினத்தில் திருமலை-கும்புறுப்பிட்டிப் பகுதியில் சிறிலங்கா ராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**அலெக்ஸ்** (கந்தையா ஜெயக்குமார் - அலஸ்தோட்டம், சாம்பல்தீவு, திருமலை)

**ரகீம்** (த- குணரட்ணம் - சாம்பல்தீவு, திருமலை)

1987-ம் ஆண்டு திருமலை - குச்சவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2ம் லெப் சுரேசன்** (அன்ரன் குரன்ஸ் ஆரன்ஸ் - 6-ம் வட்டாரம், மூதூர், திருமலை)

திருமலை - மூதூர், பட்டித்திடல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப் ...

சேவைகள் திணைக்களத்திற்கு சென்ற வருட இறுதி காலாண்டுக்கு உரிய மருந்து பொருள்கள் இன்னும் அனுப்பப்படவில்லையென்று தெரிய வருகின்றது.

இதேவேளை ஏனைய சகல பிராந்தியங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் யாழ்- பிராந்தியத்திற்கு மட்டும் இம்மருந்து பொருள்கள் அனுப்பப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது-

ஆனால் தற்போது இவ்வருட முதலாம் காலாண்டுக்கு உரிய மருந்துபொருள்கள் மட்டும் அனுப்பப்பட்டு கொண்டு இருப்பதாகவும் ஏனைய பகுதிகளுக்கு இரண்டாம்காலாண்டுக்குஉரியமருந்துபொருள்கள் தற்போது அனுப்பும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது,

சென்ற வருட காலாண்டுக்குரிய மருந்து பொருள்கள் பெறுவதில் சிலஅதிகாரிகளின் தொடருமானால் இவ்வாண்டிலும் ஓர் காலாண்டுக்குரிய மருந்து பொருள்களை இழக்க வேண்டி வரும் என்றும் பொருள்களை பெற்றுக் கொண்டால் இந்த நிலை ஏற்படாது என தெரிய வருகின்றது- (நி)

## கோழிகளுக்கு தடுப்பூசி காமதேனுவில் விநியோகம்

கோழிகளைப் பாதிக்கும் அம்மை மற்றும் கொள்ளை நோய் போன்றவற்றை தடுக்கும் அம்மைப்பால் றனிக்கற் ஆகிய தடுப்பூசி மருந்துகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் காமதேனு விவசாயப் பண்ணையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட இத்தடுப்பு மருந்துகளைப் போடுவதன் மூலம் கோழிகளுக்கு இந் நோய்கள் பரவாமல் தடுக்க முடியும்.

## விவசாய அறிமுக அட்டை பெற்றுக் கொள்ள பணிப்பு

தற்சார்புப் பொருண்மியக் கட்டமைப்பில் அடித்தளத்தை உறுதியாக உருவாக்கும் நோக்கில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் வழங்கப்பட்டு வரும் கமக்காரர் அறிமுக அட்டைக்கு இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் மே மாதம் 15ஆம் திகதிக்கு முன் தங்கள் பகுதி கிராமிய உற்பத்திக் குழு ஊடாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சென்ற வருடம் யூன் மாதம் முதல் அறிமுகப்படுத்தப்பட்ட இக்கமக்காரர் அறிமுக அட்டையானது வடதமிழீழத்திற்கு கிடைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட உள்ளீடுகளை சரியான முறையில் பங்கீட்டு அடிப்படையில் விநியோகித்தலையும் உதவித் திட்டங்களை ஒருங்கிணைப்பதையும் இலக்காகக் கொண்டது.

எனவே இக்கமக்காரர் அறிமுக அட்டையினைப் பெற்றுக் கொண்ட விவசாயிகளுக்கு மட்டுமே எதிர் காலத்தில் உள்ளீடுகள் வழங்கப்படுமென தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

---


**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**
**யாழ். கோட்டம்**

**சகல பொதுச்சபை உறுப்பினர்களுக்குமான**

**- அறிவித்தல் -**

எதிர்வரும் புதன்கிழமை (27 - 04 - 94) மாலை 4.00 மணிக்கு புதிய விஞ்ஞானக்கல்வி கழகத்தில் (எழிலகம் முன்பாக) பொதுச்சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது. பல முக்கிய விடயங்கள் ஆலோசிக்கப்பட இருப்பதனால் கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து சகல உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ள இருக்கிறார்கள்

செயலாளர்
யாழ். கோட்டம்

(இ-9263)


---

சுந்தரம்பிள்ளை, கலாநிதி கா சித்திரவடிவேல், கலாநிதி

## நேர்முகப் பரீட்சை

தேசிய கல்வி நிறுவகத்தால் நடாத்தப்பெறும் கல்வி டிப்ளோமாப் பயிற்சி நெறியில் பயில்வதற்கு விண்ணப்பித்த யாழ்ப்பாணக் கல்வி வலயம் II ஐச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான நேர்முகப்பரீட்சை நாளை புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யா-கோப்பாய் கிறிஸ்துவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுமென கல்விப்பணிப்பாளர் திரு க, கந்தசாமி அவர்கள் அறிவிக்கின்றார்.

விண்ணப்பித்த ஆசிரியர்கள் தங்கள் அடையாள அட்டை, முதல் நியமனக் கடிதம், பிறப்புச்சான்றிதழ். கல்வித்தகைமைச் சான்றிதழ், பாடசாலை அதிபரின் சான்றிதழ் ஆகியவற்றுடன் வருகை தருமாறு கேட்கப்படுகின்றனர்.

வாரப் போட்டிகளில் இன்று காலை 8.30 மணிக்கு சுழிபுரம் திருவடிநிலையில் துடுப்பு எடுத்தல் (கட்டுமரம்) போட்டி நடைபெறும்.

## கூட்டம்

"கோப்பாய்க் கோட்ட சகல அதிபர்களுக்கும் சேவைக்கால முதன்மை ஆசிரியர்களுக்குமான கூட்டம் யா / அத்தியார் இந்துக்கல்லூரியில் நாளை புதன் பி. ப 2 மணிக்கு நடைபெறும்;

## பணிப்பாளரைச் சந்திக்க கோரிக்கை

யாழ். பொது வைத்திய சாலையில் 26.04.94 தொடக்கம் பயிலும் வைத்திய உத்தியோகத்தர்களாக (ENTERN MEDICAL OFFICER) வருவதற்கு விண்ணப்பித்தோர் 26. 04. 94 திகதியன்று காலை 8. 00 மணிக்கு பணிப்பாளரைச் சந்திக்கும் படி கேட்கப்படுகின்றார்கள்.

## மலேரியா குளிகைகள் ஒரு லட்சம் வந்தன

(யாழ்ப்பணம்)

யாழ். மாவட்ட மலேரியா தடுப்பு பிரிவுக்கு மலேரியா நோய்க்கு பாவிக்கும் குளிகைகள் வந்துள்ளதாக மலேரியா தடுப்பு பிரிவு வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது,

சுமார் ஒரு லட்சம் குளிகைகள் இவ்வாறு யாழ்வந்து சேர்ந்துள்ளதாகவும் இதேவேளை இரத்தப் பரிசோதனை ஆய்வுகூட உபகரணங்களும் வந்துள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மலேரியா நோய் உச்ச கட்டத்தை அடைந்திருந்தபோது மேற்படி பொருட்களை அனுப்புமாறு உடனடியான வேண்டுகோள் விடுக்கப்பட்டபோதும் தற்போதுதான் இந்த மருந்து மற்றும் உபகரணங்களும் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது,

பரிசோதனையின் மூலம் ஐம்பதுசத வீதத்திற்கு அதிகமாக மலேரியா நோய் காணப்படும் பகுதிகளில் மட்டுமே மலத்தியோன் தெளிக்கப்படுவதாகவும் இதற்கு முக்கிய காரணம் போதிய அளவு மலத்தியோன் இன்மையே ஆகும் என அவ் வட்டாரங்கள் மேலும் சுட்டிக் காட்டியுள்ளன. (நி)

---

லங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழர்கள்,

1989-ம் ஆண்டு மட்டுநகரில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1991-ம் ஆண்டு யாழ். ஊர்காவற்றுறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண்ணடைந்த நிலையில் வீரச்சாவெய்திய,

**குட்டி - ரமேஸ்** (மாணிக்கம் ரவீந்திரன் - புத்தூர் மேற்கு, யாழ்)

யாழ் - குப்பிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். தியாகு** (ஆழ்வாப்பிள்ளை தர்மராசா - குச்சவெளி, திருமலை)

1992ஆம் ஆண்டு மட்டு-குறிஞ்சாமுனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**பாலுகேந்திரா** (கணபதிப்பிள்ளை உருத்திரா ஆலையடிவேம்பு - அம்பாறை)

**கப்டன் செல்லையா - நித்தி** (இராசையா நித்தியானந்தன் - மட்டு)

1993ஆம் ஆண்டு மட்டுமியாங்குளம் காட்டுக்குளம் பகுதியிற்சிறிலங்காஇராணுவத்தினருடன் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**திருமூர்த்தி** (சிவலிங்கம் பரமலிங்கம் - மாரியம்மன் கோயில் வீதி, -அம்பாறை)

**செல்வமணி** (கந்தையா சுதர்சன் - சம்மாந்துறை அம்பாறை)

**லெப். யோககுமார் - வித்தியானந்தன்** (கைலாயபிள்ளை - சுரேஸ் - பொத்துவில்)

**கப்டன் தனசேகர் - வரதன்** (கணேசமூர்த்தி வரதசுந்தரம் - களுவாஞ்சிக்குடி)

**2.ம் லெப். சௌந்தரராஜன் - சௌந்தரராஜா** (அரியரட்ணம் மனோரஞ்சன் - மட்டு)

**அங்குஜன்** (சித்திரவேல் விபுலானந்தன் - மட்டு)

**ஜெகதீஸ்வரன் - கஜேந்திரன்** (சாமித்தம்பி குமாரசாமி - மட்டு)

**லிங்கன்** (கிருஷ்ணபிள்ளை உதயகுமார் - மட்டு)

**ஞானதரன் - டக்ளஸ்** (செல்லப்பிள்ளை ஜீவானந்தம் -மட்டு)

**தேசியன்** (குழந்தைவேல் ரகுநாதன் - மட்டு)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-9252)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இனி நூலகம்

# தெளிவற்ற கொள்கையும் தளர்பலும் இன்றைய ஆட்சியில் உள்ளது

**- பேராசிரியர் பீரிஸ்**

(கொழும்பு)

டி. பி. விஜேதுங்காவின் ஆட்சியில் தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு ஒரு தெளிவான தீர்வு கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது. தெளிவற்ற கொள்கையும் தளம்பலும் நிரம்பிய அவர் எவ்வாறு இதனைத் தீர்க்க முடியும் என முன்னாள் கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தரும் தற்போதைய சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவருமான ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

லண்டன் பி. பி. சிக்கு அளித்த பேட்டியில் மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார். இவரின் கொள்கை நீடிப்பது என்பது அரசியல் எதிர்காலம் கிடையாது என்பதைக் காட்டும் எனவும் இந்நிலையினால் பொதுமக்களே பாதிப்பு அடைவார்கள் என்றும் அதிலும் விசேடமாக இளைஞர்களே அதிக அளவில் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையினால் அரசியல் தெளிவுடைய இளைஞர்கள் கவலை அடைந்துள்ளதாகவும் இன்று நாட்டின் பணம் மக்களின் நலன்களுக்காகச் செலவிடப்படுவதைவிட அமைச்சர்களுக்கு செலவிடப்படுவதே அதிகமானது. இருபது அமைச்சு இருக்க வேண்டிய எமது நாட்டில் இன்று எண்பத்திமூன்று அமைச்சர்கள் இருப்பதாகவும் இவர்களை நோக்கியே பெரிய அளவு பணம் செல்வதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்று இளைஞர் அரசாங்கத்தை முழுமையாக எதிர்க்கின்றார்கள். இதில் இருந்து தெரிய வருவது, ஐ. தே. க. கொள்கையைவிட சுதந்திரக் கட்சியின் கொள்கை தெளிவாக இருப்பதே: அதாவது, பதினேழு ஆண்டுகளின் பின்னால் மக்கள் ஆட்சியில் மாறுதலை விரும்புகின்றார்கள் என்றே கொள்ள முடியும் என்றார்.

## முத்திரையிடல்

(கொழும்புத்துறை)

யாழ். செயலக நிறுவைகள் அளவைகள் திணைக்களத்தால் கரவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 30 ஆம் திகதி சனிக்கிழமை; 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 5-ம் திகதி வியாழக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8-30 மணி தொடக்கம் பிற்பகல் 1-30 மணி வரையும் நிறுவை அளவைகள் முத்திரையிடப்படும்

## டிஸ்கோ வலைகள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க உடுவில் பிரிவு 35 மீனவ குடும்பங்களுக்கு மீன்தொழில் செய்வதற்காக டிஸ்கோ வலைகளை கொடுத்துள்ளது

உடுவில் பிரிவு காரியாலயத்தில் வைத்து மேற்படி நேற்று இவ் வலைகள் வழங்கப்பட்டன. குடும்பம் ஒன்றிற்கு ஒரு வலை வீதம் 35 குடும்பங்களுக்கு மொத்தம் 35 வலைகளை வழங்கியது (வி)

## பிரான்ஸ் தூதுவர் மட்டுநகர் விஜயம்

பிரான்ஸ் நாட்டின் கொழும்பிலுள்ள தூதுவர் ஜே. ஆர். பௌல் அன்டெயூ தூதுவரகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சகிதம் நாளை மட்டக்களப்புக்கு வருகை தரவுள்ளார்.

## உதைபந்தாட்டம்

மயிலங்காடு ஞானமுருகன் வி கழகத்தால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய போட்டிகளில் அளவெட்டி விநாயகர் விளையாட்டு கழகத்தை எதிர்த்து அராலி மாவத்தை வி கழகமும் பாசையூர் சென் அன்ரனீஸ் வி. கழகத்தை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தா வி கழகமும் விளையாடவுள்ளன போட்டிகள் உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## மேலுறையில் தமிழில்லை! பொருள் வாங்க மறுப்பு

(வெள்ளவத்தை)

வெள்ளவத்தைப் பகுதியில் அமைந்துள்ள கடையொன்றிற்கு பொருள்களை வாங்குவதற்கு தமிழ் அன்பர் ஒருவர் தமது நீண்ட பட்டியல்படி பொருள்கள் அனைத்தையும் வாங்கிக் கொண்டிருந்தார்.

அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த 'கேக்' ஒன்று அவரது கண்ணில் படவே அதனைக் கடைச்சிப்பந்தியிடம் சுட்டிக்காட்டி எடுக்குமாறு கூறினார் கேக் பெட்டியைக் கையில் பெற்ற அந்த அன்பர் இதில் தமிழில் ஏதுவும் எழுதப்படவில்லையே ஏன் என்று கேட்டார். கடை முதலாளிக்கு ஒன்றும் சொல்ல முடியவில்லை.

அதற்கு அவர் இப்ப இப்படித்தான் கேக் வருகின்றது, இருந்த தமிழும் இல்லாமல் போய்விட்டது என்று தமிழில் கூறினார்: வந்தவரோ அப்படியென்றால் எனக்கு ஒன்றுமே தேவை இல்லை என்று கூறி ஒரு பொருளையும் வாங்காமல் போய்விட்டார்.

# தமிழர்களின் நெல் வயலில் இராணுவம் அறுவடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாவற்கொடிச்சேனை பகுதிகளில் கடந்த பெரும்போகத்தின்போது தமிழ் மக்களால் செய்கை பண்ணப்பட்ட நெல்லின் ஒரு பகுதியை படையினரும், அவர்களுடன் இணைந்துள்ள தேசத்துரோக குழுக்களும் அறுவடை செய்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன

இப் போகத்தின்போது பெய்த பெரும் மழையினால் அறுவடைகள் உரிய காலத்தில் செய்ய முடியாமையினால் விவசாயிகள் பெரும் பாதிப்பு அடைந்தனர். எஞ்சிய வயல்களிலும் அறுவடை செய்வதற்கு தடைவிதித்த பாதுகாப்புப்படையினர் தற்போது தாமே அவற்றை அறுவடை செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் விவசாயிகள் தமது உணவுத் தேவைக்கான நெல்லைப் பெறுவதுகூட சிரமமாகியுள்ளது. இதேவேளை விவசாயிகள் வயற்புறங்களுக்கு செல்லும்போது ஒரு கொத்துக்கு மேல் அரிசியை எடுத்துச் செல்வதற்கு படையினர் தடைவிதித்திருப்பது தெரிந்ததே.

# புத்திஜீவிகள் இப்போது சு. கவை ஆதரிக்கின்றனர்

**- ஆனந்த தசநாயக்கா**

(கொழும்பு)

புத்திஜீவிகள் தற்போது சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயல் படுவதாகவும் இதனால் எதிர்கால தேர்தலில் வெற்றி தமதே என சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஆனந்த தசநாயக்கா தெரிவித்துள்ளார்.

தமது கட்சியின் நல்ல நோக்கமும் நற்சிந்தனையும் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை மையமாக கொண்டே புத்திஜீவிகள் சுதந்திரக்கட்சி பக்கம் இருப்பதாக தெரிவித்துள்ளார்

புத்திஜீவிகள் நாட்டின் நீண்டகால நலனை கருத்தில் கொண்டே தமக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளதாகவும் அத்துடன் இவர்களின் முழுமையான பலனை கட்சி பெற்றுக்கொள்ளும் எனவும் தெரிவித்துள்ளார்.

**1980 வேலை நிறுத்தத்தால்**

# வேலை இழந்த ஊழியருக்கு நட்டஈடு கொடுப்பனவு

(கொழும்பு)

1980 ஆம் ஆண்டு ஜூலையில் இடம் பெற்ற பொது வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டு தமது வேலைகளை இழந்த மத்தேகொடை, வெயாங்கொடை, துல்கிரியா புடவை ஆலைகளின் ஊழியர்களுக்கு நஷ்டஈடாகவும், சம்பளபாக்கி பணமாகவும் புடவை கைத்தொழில் அமைச்சு நாலரைக் கோடி ரூபாவை வழங்குமென அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த மூன்று புடவை ஆலைகளின் முன்னாள் ஊழியர்களான 650பேருக்கு இப்பணம் மே 7ஆந் தேதியன்று பன்னல சனசமூக நிலையத்தில்வைத்து வழங்கப்படவுள்ளது.

மேற்படி இவ்வூழியர்களுக்கு வழங்கப்படும் நஷ்டஈட்டு பணத்தின் ஒரு பகுதியை முதலீடு செய்வதற்கான திட்டமொன்றினை அமைச்சர் தயாரித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இலங்கைக்கான உதவிகள் நிறுத்தப்பட மாட்டாது

**- உலகவங்கி தெரிவிப்பு**

(கொழும்பு)

உலகவங்கியின் திட்டப் பணிப்பாளர் போல் இஸன்மான் ஜனாதிபதி டி பி விஜேதுங்காவை கடந்த வியாழனன்று ஜனாதிபதி இல்லத்தில் சந்தித்து இலங்கைக்கான உலக வங்கியின் உதவிகள் தொடர்பான பல விடயங்கள் குறித்து கலந்தாலோசனை நடத்தியுள்ளார்.

உலகவங்கியின் உதவி தொடர்பான கொள்கைகள் மற்றும் இத்துடன் தொடர்புடைய பல்வேறு அம்சங்கள் போன்றவை குறித்து இங்கு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தும் பொருட்டே போல் இஸன்மான் இலங்கை வந்துள்ளார்.

இலங்கை அபிவிருத்தி முயற்சிகளுக்கு தொடர்ந்தும் உலகவங்கி உதவியளிக்குமென்றும் இச்சந்திப்பின்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இலங்கையில் உள்ள உலக வங்கி பிரதிநிதி ரொபர்ட் பென்ஜ ரொட், நிதி அமைச்சு வளத்துறைத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் எஸ். எல். செனிவரத்ன ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர்.

# காதர் மீதான வழக்கு தொடர்ந்து நடத்தப்படும்

**அரச சட்டத்தரணி**

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் பாவா அப்துல் காதர் மீதான வழக்கு தொடர்ந்து நடத்தப்படும் என்று அரச தரப்பு சட்டத்தரணி விஜிதமலல்கொட தெரிவித்துள்ளார்

மேல் நீதிமன்ற நீதிபதி சி வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் அண்மையில் இவ் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது 'வொயர் டயர்' விசாரணையில் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நிராகரிக்கப்பட்டிருப்பினும் ஏனைய

முடிவு காண சட்டம் இடமளிக்கிறது. என்றும், இவ் வழக்கு தொடர்ந்து நடாத்தப்படும் என்றும் தெரிவித்தார்

கூட்டுப்படைத்தலைமையக குண்டுவெடிப்புடன் சம்பந்தப்பட்டதாக கூறப்படும் ஈரதனுக்கு புகலிடம் கொடுத்தது தொடர்பான இவ் வழக்கில் சம்பந்தப்பட்ட மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், மத்திய மாகாண சபை உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் அண்மையில் பிணையில் விடுவிக்கப்பட்டது தெரி...

# அரசியல் படுகொலைகளின் யுகம் மீண்டும் ஆரம்பமாகின்றதா?

**சு. க. பொதுச் செயலர் கேள்வி**

(கொழும்பு)

அரசியல் நோக்கத்துடனான படுகொலைகளின் யுகம் மீண்டும் ஏற்படுவதற்கான அபாய அறிவிப்பே மாத்தளை மாநகரசபை உறுப்பினரின் படுகொலைச் சம்பவமாகும். இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்ம சிறி சேனநாயக்க கூறியுள்ளார்

மாத்தளை மாநகர சபை உறுப்பினர் மொகமட் ரகுமான் உசைன் படுகொலையானது தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டவர் அதில் மேலும் குறிப்பிடுகையில், உசைன் கொலை...

இக்கொலை நடைபெறுவதற்கு முன் இப்பிரச்சினை ஒரு கொதிநிலையை அடைந்திருந்தது தொழிலாளர்களின் பல பிரிவுகள் வேலை நிறுத்தத்தில் இறங்கியிருந்தன மாநகரசபை வேலைகள் கூட ஸ்தம்பிதமடைந்திருந்தன.

தேசிய மட்டத்தில்கூட அதிகாரத்தில் பேராசை கொண்ட பல்வேறு பிரிவினரிடையேயான அதிகாரப் போட்டி ஆட்சியாளரை ஸ்தம்பிதம் அடையக்கூடிய கட்டத்தை அடைந்திருந்தது எனவும் குறிப்பிட்டுள்ளார்-

# பயணக் காசோலை திருட்டு தாய்லாந்தில் ஒருவர் கைது

(கொழும்பு)

திருடப்பட்ட பயணிகள் காசோலைகளை அப்பாவி...

...ளது.

வெஸ்ட் பாக். பாங்கிங் கார்ப்பரேசன் என்னும் நிறு...

# பொலிஸ் மா அதிபருக்கு தெ. மா. முதல்வர் எச்சரிக்கை

(கொழும்பு)

ஒரே மாகாணத்திற்கு இரண்டு பதில் பொலிஸ் மா அதிபர்களை நியமித்ததன் மூலம் பொலிஸ்மா அதிபர்மாகாண...

...பர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும், முதலமைச்சரின் சம்பந்தமின்றி இந் நியமனம் மேற்கொள்ளப்பட்டது என்றும், இது சிறிலங்கா அரசிய...

(கொழும்பு)

திருடப்பட்ட பயணிகள் கடவுச்சீட்டுகளை அப்பாவி உல்லாசப் பயணிகளுக்கு விற்பனை செய்த இலங்கையர் ஒருவர் தாய்லாந்துப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். தாய்லாந்துக்குள் சட்ட விரோதமாகப் புகுந்து கொண்டிருப்பதாகவும், போலியான ஆவணங்களை வைத்திருந்ததாகவும் இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வெஸ்ட். பாங். பாங்கிங் கார்ப்பரேசன் என்னும் நிறுவனத்தின் பயணிகள் காசோலைகளை விற்க முயன்ற போது ஜோசெப் அம்புரோஸ் (37வயது) என்னும் இலங்கையர் கைது செய்யப்பட்டதாகவும், இவருடன் மற்றுமிருவரும் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தாய்லாந்துப் பொலிசார் கூறியுள்ளனர்.

டயர்' விசாரணையில் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நிராகரிக்கப்பட்டிருப்பினும் ஏனைய சாட்சிகளைக் கொண்டு

உறுப்பினருமான வே. சந்திரசேகரன் அண்மையில் பிணையில் விடுவிக்கப்பட்டது தெரிந்ததே.

# பளைக் கல்விக் கோட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை

(தென்மராட்சி)

கிளிநொச்சி பளைக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட 13 பாடசாலைகளில் கணித ஆங்கில பாடத்திற்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பற்றாக்குறையாக காணப்பட்டு வருகின்றது

மேற்படி கல்விக் கோட்டத்தில் மொத்தமாக 152 ஆசிரியர்கள் கடமைபுரிந்து வருகின்றனர் இதில் கணிதம், ஆங்கிலம், சித்திரம் போன்ற பாடங்களுக்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ஒருவரும் இல்லாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது இவ் 152ஆசிரியர்களில் 52பட்டதாரிகளும் ஏனையவர்களில் 40பேர் பயிலுனர்களும் ஏனையோர் தொண்டராசிரியர்களுமாவர் பின்தங்கிய கிராமப்புறங்களில் ஆங்கில ஆசிரியர்கள் மிகவும் பற்றாக் குறையாக உள்ளது. எனவும் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர் ஒருவர் கடந்த மாதம் மரணமாகியுள்ளதால் ஆங்கிலப் பாடத்திற்கு போதிய அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் பற்றாக்குறை இருப்பதாக பளைக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார், (86]

# உயர்தர வகுப்புகளில் கிறிஸ்தவ பாடப் போதனை

## - மறைக் கல்வி நிலையம் ஏற்பாடு

(நல்லூர்)

இவ்வாண்டு க. பொ த (உயர்தரம்) வகுப்பில் கிறிஸ்தவ பாடத்தை எடுக்கும் மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புக்களையும் கருத்தரங்கையும் 27 ம் திகதி முதல் யாழ் மறைக் கல்வி நிலையத்தில் நடாத்த யாழ் மறைக் கல்விநிலையம்நடவடிக்கைஎடுத்துள்ளதாக யாழ் மறைக் கல்வி நடு நிலையம் தெரிவித்துள்ளது. எனவே இவ் வகுப்புக்களில் சேர உள்ள மாணவர்கள் ரூபா 25ஐ செலுத்தி 27 ம்திகதிக்கு முன்பாக தமது பெயர்களை பதிவு செய்யுமாறும் கோரியுள்ளது. (17)

# பிரேமா நினைவாக 50 பேருக்கு புலமைப்பரிசு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் ஒரு வருட சிரார்த்த தினத்தை முன்னிட்டு உப-சபாநாயகர் காமினி பொன்சேகா ஏழை மாணவர்களுக்கு ஐம்பது புலமைப் பரிசில்களை வழங்க முன்வந்துள்ளார். ஒவ்வொன்றும் 2375 ரூபா பெறுமதியுடைய இப்பரிசு பரிசைப் பெறும் மாணவர்களின் பெயரில் வங்கிகளில் சேமிப்புக் கணக்கில் வைப்பு செய்யப்படவுள்ளது.

யானது மேற்பாக அறிக்கையொன்றை வெளியிட்டவர் அதில் மேலும் குறிப்பிடுகையில், உசைன் கொல்லப்பட்டதன் பின்னணி ஜனநாயகத்தின் எதிர்காலத்தையும், நாட்டின் சட்டம், ஒழுங்கு என்பவற்றை பாதுகாப்பது என்ற விடயத்தையும் பெருமளவில் குழப்பியுள்ளது.

இந்த துன்பகரமான சம்பவம் நடப்பதற்குமுன் பலநாட்களாக மாத்தளை மாநகர சபையில் ஐ.தே.கவின் போட்டிப் பிரிவுகளுக்கிடையேயான உள்மோதல்கள் பற்றி பெருமளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

### தந்தை செல்வா 17வதுசிரார்த்ததினம்

(யாழ்ப்பாணம்)

தமிழரசுத்தந்தையின் 17-வது சிரார்த்ததினம் இன்றாகும். இதனை முன்னிட்டு இன்று காலை எட்டு மணியளவில் தந்தைசெல்வா நினைவுத் தூபியில் மலரஞ்சலியும்நினைவுப் பேருரையும் இடம்பெறவுள்ளது

### சைவப்புலவர்கள் விபரம் சேகரிப்பு

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தினர் யாழ்ப்பாண நகரத்தில் சைவப் புலவர் மாநாடு ஒன்றினை வெகு சிறப்பாக நடாத்தவுள்ளனர்.

இம்மாநாட்டை முன்னிட்டு அகில இலங்கையில் உள்ள சகலசைவப்புலவர்கள், இளஞ் சைவப்புலவர்களது விபரங்கள் தொகுக்கப்படவிருப்பதால் பெயர், நிரந்தர முகவரி, பிறந்த திகதி, தராதரப் பத்திரம் வழங்கியஸ்தாபனம், தராதரப் பத்திரம் பெற்ற ஆண்டு, தராதரப் பத்திரஇலக்கம் முதலான விபரங்களை ''சைவப்புலவர் திரு. வ.கந்தசாமி, செயலாளர், அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் 125, அரசடிவீதி ,யாழ்ப்பாணம்'' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது

ண்டு பதில் பொலிஸ் மா அதிபர்களை நியமித்ததன் மூலம் பொலிஸ்மா அதிபர்மாகாண சபை சட்டத்தை மீறியிருப்பதாக தென்மாகாணசபை முதல்வர் அமரசிறிதொடங்கொட கூறியுள்ளார்.

தென்மாகாணத்திற்கு முதலில் ஒரே பதில் பொலிஸ்மா அதிபரே நியமிக்கப்பட்டிருந்ததாகவும், தற்போது காலி, எம்பிலிப்பிட்டிய பகுதிகளுக்கு ஒருவரும், அம்பாந்தோட்டை, மாத்தறை மாவட்டங்களுக்கு ஒருவரும் என்று இரண்டு பதில் பொலிஸ் அதி

சம்பந்தமின்றி இந் நியமனம் மேற்கொள்ளப்பட்டது என்றும், இது சிறிலங்கா அரசியலமைப்பின் 13வது திருத்தத்திற்கு முரணானது என்றும் அவர் மேலும் குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன் இந் நியமனம் தொடர்பாக பொலிஸ் மா அதிபரிடம் விளக்கம் கோரப்பட்டிருப்பதாகவும், முன்அனுமதியின்றி இத்தகைய நியமனங்கள் மேற்கொள்ளப்படக் கூடாது என்று எச்சரிக்கை விடப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


21-ம் நாள் நினைவஞ்சலி



கப்டன் பெருவளவன்/வில்லியம்

(கனகசபாபதி ஸ்ரீதரன்)

கல்லடி, மட்டக்களப்பு

பிறப்பு: 10-09-1968

வீரச்சாவு: 06-ம 1994

நாட்கள் பல நகர்ந்தாலும்
நம்மனதில் நிலைத்தவனே,

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம் 26-04-94 (செவ்வாய்) இன்று நிகழும் மதிய போசனத்தில் அனைத்துப் போராளிகளையும் நண்பர்களையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

90, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்

(8130)



A/L 96

பிரிவு II

ஆரம்பம் 30-4-94

(காலை 7 மணி)

| | |
|---|---|
| பொருளியல்:- | மகேந்திரன் |
| கணக்கியல்: | சாம்- |
| வர்த்தகம்:- | தேவா |
| அளவையியல்:- | சோதிலிங்கம் |
| தமிழ் | குழந்தை |
| புவியியல்:- | குணராஜா |
| இந்துநாகரிகம்: | அருள்நங்கை |
| அரசியல்:- | கியூபேட் |
| இந்து சமயம்:- | அருள்நங்கை, கிரிதரன் |
| வரலாறு:- | ஸ்ரீதரன் |
| நாடகமும் அரங்கியலும்:- | மோசேஸ் |
| கிறிஸ்தவம்:- | அருட்சகோதரர் |

உங்கள் அனுமதிகளை 25-4-94 முதல் பெற்றுக்கொள்ளவும்

மேலதிக விபரங்கட்கு:- S. நங்கை

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி-9239)

# மைலாப்பூர், பெருந்துறை தொகுதிகளில் வேட்பாளர் யார்? வெற்றி எவருக்கு?

அ.இ. அ.தி.மு.கவுடன் மத்தியில் ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சி கூட்டணி அமைப்பதற்கு வாய்ப்பு எதுவும் உண்டா? பிளவுபட்டுள்ள தி.மு.க.வினரில் எந்த அணிக்கு செல்வாக்கு அதிகம்? கருணாநிதி தலைமையிலான தி.மு கவுக்கும் இடதுசாரிக் கட்சிகளுக்கும் இடையிலான உறவின் நிலை எத்தகையதாக இருக்கின்றது? காங்கிரஸ் கட்சி தமிழ் நாட்டில் திராவிடகட்சிகளின் துணை இல்லாமல் தனித்துக் காலூன்ற முடியுமா? அ.இ அ.தி.மு.கவை எதிர்க்க மற்ற எல்லாக் கட்சிகளும் பொது உடன்பாடு ஒன்றை எட்ட முடியுமா? என்பது போன்றபல கேள்விகளுக்கான விடை திருப்பெருந்துறை மற்றும் மைலாப்பூர் தொகுதிகளின் இடைத்தேர்தல் களத்தில் கிடைக்கவிருக்கின்றது.

திருப்பெருந்துறை சட்டமன்றத் தொகுதி அ.இ.அ.தி.மு. கவின் வி என் சுப்பிரமணியம் மறைந்ததைத் தொடர்ந்து காலியானது. கொங்கு வேளாள கவுண்டர் சமூகத்தினரைப் பெரும்பான்மையாகக்கொண்ட இத்தொகுதியில் அ.இ.அ.தி.மு.கவக்கீலான பெரியசாமியையே வே பாளராக நிறுத்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மறைந்த சட்டமன்ற உறுப்பினரான சுப்பிரமணியத்தின் மனைவி ஜெயந்தி இத்தேர்தலில் போட்டியிடலாம் என்று பேச்சடிபட்டபோதும் தான் அரசியலில் ஈடுபடப்போவதில்லை என்று அவர் பகிரங்கமாகவே அறிவித்து விட்டது பெரியசாமிதான் அ.இ.அ.தி.மு. க வேட்பாளர் என்பதைப் பெரும்பாலும் ஊர்ஜிதம் செய்வதாகவுள்ளது. ஆறுமாதங்களுக்கு முன்பு ஒருதடவை தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது முதல் சட்டத்தரணி பெரியசாமி கிராமங்களில் சென்று வேட்பாளர் என்கிற முறையில் வேட்டு சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார். அப்போது தமிழக முதல்வர் ஜெயலலிதாவினால் உத்தியோகபூர்வமாக பெருந்துறை தொகுதிக்கான வேட்பாளர் என்று அறிமுகமாக்கப்பட்டவர் என்பது பெரியசாமிக்கு மேலும் ஒரு பிளஸ் பாயிண்ட் என்பது குறிப்பிடத்தக்கது

தி.மு. கவைப் பொறுத்தவரையில் இந்த தொகுதியை தனது கூட்டணிக் கட்சியான வலது கம்யூனிஸ்ட்டுக்களுக்கே விட்டுத் தருவது வழமை. 89 இல் நடந்த தேர்தலின்போது நான்கு முனைப் போட்டி நிலவிய நிலையில் தி.மு.க இத்தொகுதியில் போட்டியிட்ட போதும்கூட அதன் வேட்பாளர் செ. கந்தப்பன் தோல்வியுற்றவர் என்பது இங்கு குறிப்பிடக்கூடியது. எனவே இம் முறையும் வலது கம்யூனிஸ்ட்கட்சிக்காக அதன் வேட்பாளர் டி.கே. நல்லப்பன் நிறுத்தப்படுவார். என்று நம்பப்படுகின்றது. மைலாப்பூர் தொகுதியில் தி.மு.க வின் வேட்பாளருக்கு ஆதரவு தருவோம் என்று வலதுகம்யூனிஸ்ட்டுக்கள் அறிவித்திருப்பதும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

தி.மு.கவின் வை.கோ அணியைப் பொறுத்தவரையில் அரசியலுக்குப் புதுமுமான ஒரு பெண்ணை வேட்பாளராக அறிமுகப்படுத்தலாம் எனக் கூறப்படுகிறது. எனினும் அந்தப் பெண் யாராக இருப்பார் என்பதுஇரகசியமாக வைக்கப்பட்டுள்ளது என்பது ஒருபுறமிருக்க - சிங்கம் வேலுச்சாமி என்பவரும் வேட்பாளராக நிறுத்தப்படும் சாத்தியம் இருப்பதாகவும் பேசப்படுகிறது.

காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் அதன் நிலை இத்தொகுதியில் பெரும் பரிதாபகரமாக உள்ளது. மூப்பனார் மற்றும் வாழப்பாடி கோஷ்டியின் குடுமி பிடிச்சண்டைகளில் எந்தக் கோஷ்டியினருக்கு வேட்பாளர் டிக்கட் கிடைக்கும் என்பதே இன்னமும் ஊர்ஜிதமாக்கப்படவில்லை. பெரியார் மாவட்ட காங்கிரஸ் கமிட்டித்தலைவர் எஸ். என். பாலசுப்பிரமணியம் வேட்பாளராக நியமனம் பெறலாம் என்று கூறப்பட்டாலும் கூட பழநி இடைத்தேர்தலின் போது அவர் ஒதுங்கியிருந்ததால் அவருக்கு வாய்ப்பு ரொம்ப ரொம்பக் குறைவாகவே உள்ளதாம்! இவர் மூப்பனார் கோஷ்டியைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் காங்கிரஸ் தொழிற்சங்கமான ஐ. என், டி. யூ.சியின் தலைவர் ஆறுமுகம், வக்கீல் கார்வேந்தன் போன்றோரும் வேட்பாளர் நியமனம் பெறக் காத்துள்ளனராம்.

இதனிடையே இந்தஇடைத்தேர்தல்கள் எப்படியும், ஏதோவொரு காரணத்தால் தள்ளிப் போகும் என்றும் காங்கிரஸ் கட்சியின் இன்னுமொரு சாரார் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

மைலாப்பூர் தொகுதியின் நிலைவரம் வேறு அ.இ அ.தி மு.க சட்டமன்ற உறுப்பினராக இருந்த ரங்கராஜனின் மறைவைத் தொடர்ந்துஇங்கு வெற்றிடம் ஏற்பட்டது. ஆளும் கட்சியின் சார்பில் அமைச்சர் மதுசூதனனுக்கு நெருக்கமானவராகவும், அதிகார பூர்வமற்ற சட்டமன்ற உறுப்பினர் போல் கடந்த சில மாதங்களாக செயற்பட்டு வந்தவரான கே.ஆர்.வி. ரமணி அ.இ. அதிமுக வேட்பாளராக நியமனம்பெறலாம் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

> மைலாப்பூர், பெருந்துறை சட்டப்பேரவை தொகுதிகளுக்கான வேட்புமனுத் தாக்கல் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளது. இதில் தேர்தலில் எந்தக் கட்சியின் சார்பில் எவர் நிறுத்தப்படக் கூடும் என்பது தொடர்பாக அண்மையில் ஜூனியர் விகடன் வெளியிட்ட கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

அமைச்சர் மதுசூதனனை வைத்து அடிக்கடி அதிரடிப் பொதுக்கூட்டம் நடத்தும் கே. ஆர். வி.ரமணியை அண்மையில் இப்பகுதியிலுள்ள எம் ஜி. ஆர் சிலைக்கு மாலை போட வந்த முதல்வர் ஜெயலலிதா பெயர் சொல்லி அழைத்துக் கூப்பிட்டு பேசியமை அவருக்குப் பெரிய பிளஸ்பாயிண்ட்தான். இவ்வாறு ரமணியை முதல்வர் அழைத்துப் பேசியபோது அமைச்சர்கள், மற்றும் உயர் பொலிஸ் அதிகாரிகள்பார்த்துக்கொண்டிருந்தனர் என்பது முக்கியமானது. இச் சம்பவத்திற்கு பிறகு ரமணியின் செல்வாக்கு அதிகரித்திருந்தது இருந்தாலும் கூட சைதாப்பேட்டைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் மைலாப்பூர் வாசியுமான எம்- கே. பாலன் ரமணியை ஆதரிப்பதில்லை என்பதும் இவர்கள் இருவருக்குமிடையில் அடிக்கடி மோதல் சம்பவங்கள்ஏற்படுவதும்குறிப்பிடத்தக்கதாகும் அ-இ.அ தி மு-கவின் வேட்பாளர் பட்டியலில் நடன இயக்குநர் ரகுராம் குடிசை மாற்று வாரியத் தலைவர் வளர்மதி, எம். ஜி ஆர் இளைஞர் அணியின் முன்னாள் தலைவர் கராத்தே பலசுப்பிரமணியம் என்போரும் உள்ளனர்

எந்த அரசியல் கட்சிகளும் ஈடுகொடுக்க முடியாத அளவுக்கு அதிரடி மூலம் திணற வைக்கும் அமைச்சர் முத்துசாமி தான்- இந்தத் தொகுதிக்கான தேர்தல் பொறுப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார் ராணிப்பேட்டை தொகுதிக்கான தேர்தல் வேலைகளையும் முதல்வர் ஜெயலலிதா இவரது பொறுப்பில் விட்டிருந்தமை தெரிந்ததே.

இனி மைலப்பூர் தொகுதி அமைந்துள்ள சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் தி மு.கவின் கோட்டை என்பது குறிப்பிடத்தக்கதாகும் அத்துடன் ஆளும் கட்சியின் தடாலடி அரசியலை நேருக்கு நேர் பார்க்கும் சந்தர்ப்பம் இத்தொகுதி வாசிகளுக்கு அதிகம். இதைச் சமாளிக்க ஆளும்கட்சி தடுமாறினாலும் தி.மு.கவின் பிளவு தமக்கு உதவும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு உண்டு

வை. கோ இல்லாதநிலையில் தனது செல்வாக்கை இத்தொகுதியில் நிரூபிக்க வேண்டிய நிர்ப்பந்தம் தி-மு கவிற்கு உண்டு அ தி. மு. கவின் அதிகார துஷ்பிரயோகம், பணபலம் போன்றவற்றை எதிர்க்கும் துணிச்சல் மிகுந்த வேட்பாளர் மூலம் வை கோ விற்கு எதிரான தங்கள் செல்வாக்கை நிலைநாட்ட ஒருமுக்கிய பிரமுகரை தேர்தலில் நிறுத்த தி.மு. கவிரும்பும் எனவே தி மு.க இளைஞர் அணித் தலைவரும், கருணாநிதியின் புதல்வருமான மு.க.ஸ்டாலின் அல்லது முன்னாள் அமைச்சர் காளிமுத்து இத் தேர்தலில் தி மு க வேட்பாளராகலாம் இதேவேளை தமிழக நல்லாட்சி இயக்கமும் ஜனதாக்கட்சி என்பவற்றின் பிரமுகரான டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி, ஜெயலலிதாவுக்கு பதிலடி தர இத் தேர்தலை பயன்படுத்த விரும்புவது சுவாரஸ்யமானதாகும். காங்கிரஸ் கட்சியின் ஒத்துழைப்புடன் முன்னாள் கலெக்டரான திருமதி சந்திரலேகாவை வேட்பாளராக்குவது சுப்பிரமணியம் சுவாமியின் திட்டம். சுவாமியின் யோசனை காங்கிரசில் செல்வாக்கு பெறுமா என்பது கேள்விக்குரியது.

வை. கோ அணியைப் பொறுத்தவரையில் இத் தேர்தல் அவர்களது தலை எழுத்தை தீர்மானிக்க இருப்பது குறிப்பிடத்தக்கது, கட்சியின் அலுவலகத்திற்கு தனது வீட்டைத்தந்த கலைப்புலி தாணு ஏற்கனவே இந்த தொகுதியில் தி.மு க. சார்பில் போட்டியிட்டு வென்றவரான வழக்கறிஞர் கணபதி போன்றோர் இந்த அணியின் வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

திரைப்பட இயக்குநரும், மூப்பனாரின் பள்ளித் தோழருமான மூத்த காங்கிரஸ் பிரமுகரும் மயிலை வாசியுமான முக்தா சீனிவாசன், காங்கிரஸ் கமிட்டியின் தலைவி டாக்டர் ரமாதேவி, அமெரிக்காவிலிருந்து திரும்பி சமூகசேவையில் ஈடுபட்டுள்ள அமெரிக்க நாராயணன், இளைஞர் காங்கிரஸ் பிரமுகர் கராத்தே தியாகராஜன் போன்றோர் காங்கிரஸ் வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளவர்கள்.

காங்கிரஸ் கட்சி இந்தத் தேர்தலில் எப்படியும் தனது வேட்பாளர் ஒருவரை நிச்சயம் நிறுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

தேர்தலில் நிற்கப்போவது யார்? என்பதும் ஜெயிக்கப் போபவர்கள் யார் என்பதும் இன்னும் சில வாரங்களில் தெரிந்துவிடும்,

## ஐ. நா. தூதுவரக அதிகாரி மார்ச் 25 முதல் மர்மமறைவு

(கொழும்பு)

இலங்கையின் ஐ. நா. தூதுவராலயத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் திடீரெனக் காணாமற் போயுள்ளார் ரோபோ பியாட்டர் என்னும் இவ் அதிகாரி மார்ச் 25ஆம் திகதி காணாமற் போயுள்ள இவர் ஐந்து வருட ஒப்பந்த அடிப்படையில் ஐ நா தூதுவராலயத்தில் நியமனம் பெற்றிருந்தார். இவரது மூல ஒப்பந்தம் காணாமற்போன ஒரு வார காலத்தில் காலாவதியாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர் தமது சேவைக்காலத்தை நீடிக்கும்படி விண்ணப்பித்து இருந்ததாகவும், இவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதையடுத்துஇவர்காணாமற் போயிருப்பதாகவும் இலங்கைக்கான ஐ. நா. தூதுவர் ஆனந்த குருகே கூறியுள்ளார்.

இவரது மறைவு மர்மமானதாக இருப்பதாகவும், கூறப்படுகின்றது.

## ஐ.தே.கவினுள்ளே யுத்தம் இப்போது நடக்கின்றது

- அதாவுட செனவிரத்தின

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு யுத்தத்தை முன்னெடுப்பதற்குப் பதிலாக ஐ.தே கவுக்குள்ளேயே யுத்தம் நடக்கின்றது இன்னுமொரு ஜனாதிபதி பதவிக்கு வந்த பின்னர்தான் வடக்கு கிழக்கு யுத்தம் பற்றி சிந்திக்கும் நிலை ஏற்படும் என்று ஐக்கிய சோசலிச முன்னணியின் அதாவுட செனவிரத்தின பாராளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், தென்மாகாணசபைத் தேர்தலில் மக்கள்ஐக்கிய முன்னணி வெற்றிபெற்ற பின்னர் அபிப்பிராய பேதங்கள் ஐ தே கவினுள் நிலவுகின்றது. இப்போதைய நிலையில் ஐக்கியதேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது குறித்து பெரும் இழுபறி காணப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

## கோழிவளர்ப்பு ஊக்குவிக்க பொரு.மே. நிறுவனம் நடவடிக்கை

எமது பிரதேசம் முட்டை, இறைச்சி, பால் ஆகியவற்றில் தன்னிறைவு பெற வேண்டும் என்ற இலக்குடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

நல்லின கோழி குஞ்சுகள் விநியோகம், கடன்வசதி, தீவனம் உபகரணம் ஆகியவற்றை நியாய விலையில் கிடைக்க செய்தல், அடைமுட்டைவிநியோகம், தடுப்பூசி போடுதல், ஆலோசனை வழங்குதல், பயிற்சி வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனம் கோழி வளர்ப்பை ஊக்கப்படுத்தி வருகின்றது.

இந் நடவடிக்கைகளினால் முட்டை உற்பத்தி அதிகரித்து இருக்கின்றது ஆயினும் கோழி பொருளாதார ரீதியாக இலாபகரமாக பயன் தரும் காலம் 1½ வருடமாக இருப்பதனாலும் ஒப்பீட்டளவில் மாரிகாலத்தில் முட்டை இடும் அளவு குறைவாக இருப்பதனாலும் தொடர்ந்து வயது சென்ற கோழிகளை கழித்தும் புதிய குஞ்சுகளை சேர்த்தும் வளர்க்க வேண்டியது அவசியமாகும்.

எமது நாட்டுக் கோழியை விட புதிய இன கோழிகள் முட்டை கூடுதலாக இடுபவையாக உள்ளதுடன் அடை கிடக்கும் தன்மையும் குறைவாக உள்ளன நல்லின அடை முட்டைகளை நாட்டுக்கோழிக்கு அடை வைத்து சாதாரண திறந்து விடும் வளர்ப்பு முறை மூலமே இலகுவாக வளர்க்க முடியும்.

இந்த முறைமூலம் நல்லின கோழியை அதிக செலவின்றி வளர்த்து ஒவ்வொரு குடும்பத்தின் தேவைக்கு கூடிய முட்டைகளை பெறமுடியும், மக்களுக்குத் தேவையான கோழி, வான்கோழி, தாராஅலங்கார கோழிகள் ஆகியவற்றின் நல்லின அடைமுட்டைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விலங்கு வேளாண்மை பகுதியினரிடம் பெற்று பயனடையுமாறு அவர்களின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## பல்கலைக்கழக அனுமதிக்கான

## சிறிலங்கா ...

பல்கலைக்கழக அனுமதிக்கான

# வெட்டுப்புள்ளி நிர்ணயிக்கப்படுவதில் வடபகுதிக்கு பாரபட்சம்

## ந. ச. ச. கட்சி கண்டனம்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கான மாணவர் அனுமதிக்கான 1993/94ஆம் கல்வியாண்டில் கடைப்பிடிக்கப்பட்டுள்ள வெட்டுப்புள்ளி முறை யாழ்ப்பாண மாவட்ட மாணவர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது; பாரபட்சமானது. யாழ்ப்பாண மாவட்டமும், கொழும்பு மாவட்டமும் ஒரே அடிப்படையில் நோக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நவசமசமாஜக் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

இக்கட்சி உயர்கல்வி அமைச்சுக்கு மேலும் சுட்டிக்காட்டியிருப்பதாவது: ஒரு கால கட்டத்தில் கல்வித்துறையில் பிரகாசித்த யாழ்ப்பாண மாவட்டம் இன்று மிகவும் பின்தங்கியுள்ளது. நீண்டகால யுத்தப் பாதிப்புகளும், கல்வியில் அடிப்படை வசதியீனங்களும் வட பிரதேசத்தின் கல்விச்சூழலை மிகவும் பாதித்துள்ளது இதனால் வடபிரதேசத்தின் கல்விச் சூழல் மூன்றாமிடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. அன்று பின்தங்கிய மாவட்டங்கள் என்று கணிக்கப்பட்டவை கூட இன்று வட பிரதேசத்தைவிட முன்னேறியுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தின் பின்னணியில் கடந்த நான்கு ஆண்டுகளில் கல்வி மிகவும் பாதிக்கப்பட்டுள்ள போதும் கூட சம்பந்தப்பட்டவர்கள் அதனைக் கருத்தில் கொள்வதாக இல்லை எனவும், வெறும் அலட்சியப் போக்கையே கடைப்பிடிக்கின்றனர் எனவும் இது 1991/92, 1992/93ஆம் கல்வியாண்டுகளுக்கான அனுமதிகளின் போதும் அவதானிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவநடவடிக்கைகள், விமானத்தாக்குதல்கள் அனைத்துக்கும் மேலாக நிம்மதியற்ற மனநிலை என்பவற்றிற்கு மத்தியில் வடபிரதேச மாணவர்கள் கற்றுவருவது தெரிந்ததே

நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் அவ்வப்போதைய சூழலுக்கேற்ப வெட்டுப்புள்ளி நிர்ணயிக்கப்படும் போதும், எனினும் வடபகுதியின் தற்போதைய நிலை கடந்த வருடத்தைப் போலவே இம்முறையும் கவனத்திற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விடுதலைப்புலிகள் பற்றியவதந்தியால் இரத்தினபுரியில் பெரும் பதற்றம்

இரத்தினபுரிப் பகுதியில் அண்மையில் பரவிய ஒரு வதந்தியைத் தொடர்ந்து அங்கு பெரும் பதற்றம் நிலவியது. ஆனாலும் கிராமம் முழுவதிலும் பற்பல வசதியீனங்களும், பதற்றமும், அச்சமும் இப்பகுதியில் ஏற்பட இந்த ஒரு வதந்தியே காரணமாகியது.

இரத்தினபுரி பொலிசாருக்கு தொலைபேசி மூலம் இப்பகுதியிலுள்ள பெரன்துவ கிராமத்திற்கு விடுதலைப்புலிகள் ஆயுதங்களுடன் வந்திருப்பதாக தகவல் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இவ் வதந்திபரவியது. லெல்லுபிட்டிய பகுதியைச் சேர்ந்த மிகவும் பின்தங்கிய கிராமங்களில் பெரன்துவவும் ஒன்றாகும்.

இதனைத் தொடர்ந்து இப்பகுதிக்கு விரைந்த பொலிசார் மோதல்களை எதிர்பார்த்து தயார் நிலையில் வைக்கப்பட்டனர். பொலிசாரின் வருகையைக் கண்டதும் அச்சத்தாலும், பீதியாலும், இரத்தினக் கற்கள் தோண்டும் கிடங்குகளிலும் இன்னும் பிற இடங்களிலும் ஒளித்திருந்த பெண்கள், குழந்தைகள், மற்றும் ஆடவர்கள் வெளியே வந்தனர்.

விடுதலைப் புலிகள் இப்பகுதிக்கு வந்திருப்பதாக வதந்தி பரப்பிய ஒருவர் பொலிஸ் சுப்பிறிண்டன்டினால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டபோது தமது சகோதரியின் வீட்டுக்கு வந்த ஒருவர் தவறான சிங்களத்தில் பேசியதாகவும், கத்தியைக் காட்டி மிரட்டியதாகவும், அதனால் தான் அவரை ஒரு விடுதலைப்புலி என்று நினைத்ததாகவும் தெரிவித்தார். தனது இச் செய்கையால் முழு கிராமமும் பதற்றம் அடைந்தது குறித்து தான் அதிர்ச்சியுற்றதாகவும் குறிப்பிட்டார். அதற்கு பதிலளித்த பொலிஸ் அதிபரோ கிராமம் மட்டுமல்ல நாடு முழுவதுமே பதற்றப்பட்டுள்ளது. கொழும்பிற்கும் ஏனைய பல்வேறு இடங்களுக்கும் தாம் இத் தகவலை அறிவித்து விட்டதாகவும் குறிப்பிட்டார்.

# சிறிலங்கா இராணுவத்தினரிடம் ஊழலும் மோசடியும் பெருமளவில்

## - தினேஷ் குணவர்த்தனா

(கொழும்பு)

வடக்கு கிழக்கு யுத்தம் இராணுவ உயரதிகாரிகள் ஆயுதக் கொள்வனவு மூலம் பெரும் பணம் சம்பாதிப்பதை நோக்கமாகக் கொண்டே தொடர்ந்து நடாத்தப்பட்டு வருவதாகவும், தென்பகுதியில் இராணுவத்தினருக்கென சேகரிக்கப்படும் பொருட்கள் அவர்களுக்கு போய்ச் சேருவதில்லை எனவும், இராணுவத்தில் பெரும் ஊழலும் மோசடியும் இடம் பெற்று வருகிறது எனவும் சிறிலங்கா பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

இதனையடுத்து பாராளுமன்றத்தில் பெரும் கூச்சலும் குழப்பமும் நிலவியது மக்கள் ஐக்கிய முன்னணியின் உறுப்பினரான தினேஷ் குணவர்த்தனா பாராளுமன்றத்தில் மேலும் கூறுகையில், ஆயுதக் கொள்வனவு மூலம் பெரும் பணம் சம்பாதித்து வருகின்றனர் தென்மாகாணத்தில் இராணுவத்தினருக்காக சேகரிக்கப்படும் பொருட்கள், அவர்களுக்குப் போய் சேருவதில்லை. பெரும் அளவில் இராணுவத்தில் இடம்பெற்று வரும் ஊழல் மற்றும் மோசடிகள் சம்பந்தமாக தகவல்களும் கடிதங்களும் எமக்கு வருகின்றன. இது பற்றி பாராளுமன்றத்தில் எழுப்பப்படும் வினாக்களுக்கு பொருத்தமான பதில் கிடைப்பதாக இல்லை. யுத்தத்தை சாதகமாக்கி இராணுவ அதிகாரிகள் சிலர் ஊழலில் ஈடுபடுகின்றனர். அவர்கள் யுத்தம் தொடர்வதையே விரும்புகின்றனர் எனத் தெரிவித்தார்.

இவரையடுத்து உரையாற்றிய சுதந்திரக் கட்சியின் றிச்சர்ட் பத்திரான கூறுகையில் இராணுவ உயரதிகாரிகளும், அரச தரப்பு அரசியல்வாதிகளும் பயன் பெறுவதற்காகவே யுத்தம் நடத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

அத்துடன், கேள்விப் பத்திரங்கள் கோரப்படாமல் உலங்கு வானூர்தி கொள்வனவு செய்யப்பட்டது பற்றியும், நிதியமைச்சைச் சேர்ந்த ஒருவருமின்றி சீனாவிடமிருந்து யுத்தக் கப்பல் கொள்வனவு செய்யப்பட்டது பற்றியும் பிரச்சினைகள் எழுப்பப்பட்டன.

மிக விரைவில்...

உங்கள் கண்ணெதிரில்.

போராளிகளும் மக்களும் இணைந்து வழங்கும்

நிதர்சனம் நிறுவனத்தின் சிறப்பு வெளியீடு

**காற்று வெளி**

தரமான கலைப் படைப்பின்

திறமான கருத்தோவியம்

- மக்களோடு புலிகள்
- சண்டைக் காட்சிகள்
- நெஞ்சையுருக்கும் சம்பவங்கள்

உங்கள் இதயங்களில் இடம் பிடிக்கும் இன்னும் பல அரிய கண்ணைக் கவரும் வண்ணக்காட்சிகள்

மறவாதீர்கள் **காற்று வெளி**

தவறாதீர்கள் பார்த்து மகிழ

இது ஒரு நிதர்சனம் தயாரிப்பு

(சி-9234)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

### சிந்தனைக்கு

ஐயப்பாட்டினைக் கொளுவ கொக்கியும் இல்லை, வளையமும் இல்லை.

— வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 26-04-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2028
தபால் பெட்டி எண் - 05

## மயிரில்லாதவன் தலையில் மொட்டை வழித்த மாதிரி

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தடை விதிக்கப்பட்ட காலப் பகுதி முடிவடைந்ததைத் தொடர்ந்து மீண்டும் விடுதலைப் புலிகள் இயக்கம் மீது தடை விதித்தல் தொடர்பான விடயம் முக்கிய விவகாரமாக எழுந்துள்ளது. இது தமிழகத்தில் உள்ள அ.தி.மு.க. அரசிற்கும் மத்தியில் உள்ள காங்கிரஸ் ஆட்சிக்கும் இடையில் பெரும் முறுகல் நிலையையும் உருவாக்கியுள்ளது.

ஆனால், இதில் முக்கியமானதும், வேடிக்கையானதும் என்னவென்றால், தமிழகத்திலுள்ள அரசாங்கமோ, மத்தியிலுள்ள ஆட்சியாளர்களோ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கும் நோக்கம் கொண்டிருக்கவில்லை என்பதோடு, அவ்வாறான அறிவிப்புக்கள் எதையும் விட்டதாகவும் இல்லை. இரு தரப்பினருமே விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்குத் தயாராகவும் இல்லை.

அவ்வாறானால், மத்திய அரசிற்கும், தமிழக மாநில அரசிற்கும் இடையில் விடுதலைப் புலிகள் விவகாரம் ஏன் இந்தளவிற்கு இழுபறி நிலையையும் முறுகலையும் ஏற்படுத்த வேண்டும் என்பதே கேள்வியாகும். இதில் உள்ள அர்த்தம் என்ன? இதன் தேவை என்ன?

புலிகள் மீதான தடையை நீடிக்கக் கோரும் தீர்மானத்தை சட்டசபையில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா எடுக்க முற்படும்போதே மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் இது ஒரு தேவையற்ற விடயம் என்று தெரிவித்தார். விடுதலைப் புலிகள் விவகாரத்தில் மத்திய அரசு தனது கொள்கையையும் மாற்றிக் கொள்ளவில்லை எனவும் குறிப்பிட்டார். அத்தோடு ஒரு படி மேலே போய் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும், பாகிஸ்தான் உளவு ஸ்தாபனத்திற்கும் தொடர்பு இருப்பதாகவும் தெரிவித்தார்.

இருப்பினும். ஜெயலலிதா வழமைபோலவேதான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்ற ரீதியில், விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிக்குமாறு கோரும் தீர்மானம் ஒன்றை தமிழக சட்டசபையில் கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளார்.

ஆனால், இதேசமயம் மத்திய அமைச்சர் சவான் தமிழக அரசு விடுதலைப் புலிகளைத் தடை செய்வதற்கான விபர அறிக்கை எதையும் மத்திய அரசிடம் ஒப்படைக்கவில்லை எனக் குற்றம் சாட்டினார். ஆனால் அது ஜனவரி மாதத்திலேயே அனுப்பப்

# உலகையே ஆட்டம் காண வைத்த
# அடால்ப் ஹிட்லரின் நாசி இனவெறி

முதலாம் உலகப்போருக்குப்பின்பான சமாதான உடன்படிக்கையின்படி பெருமளவு சுமைகளை தாங்க வேண்டியிருந்த ஜெர்மனியில் இரண்டாம் உலகப் போருக்கான விதை ஊன்றப்பட்டது அதன் தனிப்பெரும் விருட்சமாக அதனைக் கொண்டு நடத்தும் சர்வாதிகாரியாக விளங்கியவர் ஹிட்லர்.

ஜெர்மனியர்களிடம் இயல்பாக இருந்த ''தேசத்தை ஆளவேண்டியவர்கள் நாமே'' என்ற உணர்வு முதலாம் உலகப் போரின் பின்பு பெருமளவு பாதிப்பைப் பெற்றிருந்த போதும் அதனை அரசியலுக்குப் பயன்படுத்தி உலக யுத்தம் ஒன்றை தன் ஒரே அதிகாரத்தின் கீழ் அமுல்படுத்தி ஜெர்மனியை சர்வதேச உலகில் தனிப்பெரும் இடத்திற்கு கொண்டுவர முயன்றவர் என்ற வகையில் ஹிட்லரின் ''தேசாபிமானம்'' சர்வதேச உலகிற்கு எடுத்து வரப்பட்டது அவருடைய தேசாபிமானத்தின் வீச்சு பிற பல வல்லரசுகளையும் ஆட்டம் காண வைத்தது. உலகம் ஒரு முறை குலுங்கி அடங்கியது.

### கடன் தொல்லை

சுமக்க முடியாத கடன் தொல்லையினால் ஜெர்மனிய மக்கள் வறுமையையும்வேலையில்லாத்திண்டாட்டத்தையும் பொருளாதார சீர்குலைவையும் எதிர் கொண்டனர். இக்குழப்ப நிலையைப் பயன்படுத்தி ஏராளமான அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றன. கம்யூனிஸ்டுகளும் சோசலிஸ்டுக்களும் நாஜிகளும் அரசியல் கட்சிகளை தோற்றுவித்து மக்களுடைய துயரங்களைத் தீர்க்க முன்வந்தனர்.

முடிவில் நாஜிகள் வெற்றி அடைந்தனர். நாஜி கட்சியின் தலைவர் அடால்ப் ஹிட்லர் ஒரு போர் வீரராக வாழ்க்கையைத் தொடங்கி தொழிலாளர் கட்சி ஒன்றை ஆரம்பித்து பின்னர் அதனைச் சோஷலிஸ்ட்கட்சிஎன்ற பெயரைமாற்றிபிறகு நாஜிக் கட்சி என்ற புது பெயரில் ஜெர்மனிய மக்களைக் கவர்ந்தார்.

தேசிய சோஷலிஸ்ட்கட்சி (National Socialist Party) நாஜிக் கட்சியாக மாறிய பிறகு அவர் ஓயாது மக்களிடையே நேசநாடுகள் ஜெர்மனிக்கு இழைத்த கொடுமைகளையும் வோர்சேல்ஸ் உடன்படிக்கையால் ஜெர்மன் மக்கள் படும் துயரங்களையும் பிரசாரம்செய்துவந்தார். ஜெர்மன் மக்களின் நல்வாழ்வுக்காகத்தான் நாஜிக் கட்சி தோற்றுவிக்கப்பட்டதென்றும் அக்கட்சியின் முதல்வேலை அவர்களின் இழிநிலையைப் போக்குவதேயாகும் என்றும் அவர் அடிக்கடி கூறிவந்தார் பிரசாரம் ஒருதனிக்கலையாக நாஜிகளின் கையில் மாறியது அக்கலையின் தலைசிறந்த நிபுணராக கோயபல்ஸ் என்பவர் விளங்கினார் அவருடைய பிரசாரத்தில் மக்களிடையே புதிய நம்பிக்கையும் இனவெறியும் தேசிய வெறியும் ஏற்பட்டன. உலகிலேயே ஜெர்மனியர்தான் ஆளப்பிறந்தவர்கள் என்றும் மற்றைய இனத்தவர்கள் அவர்களால் ஆளப்படவேண்டியவர்கள் என்றும் வெளிப்படையாக பிரசாரம் செய்தார்.

### வெற்றிக்கு காரணம்

ஹிட்லரின் வெற்றிக்கு காரணமாக இருந்தது அவரது இனக் கொள்கையாகும் உலகில் மிகச்சிறந்த இனம் நார்டிக் இனமென்றும் அந்த நார்டிக் இனத்தின் பெரிய சாதனைகளே இன்றைய உலகின் நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் அடிப்படையானதெனவும் அவர் கூறினார் இந்த நார்டிக் இனத்தைச் சேர்ந்த மக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தம் இனத்தின் பெருமையை கெடுக்கும் ஏனைய எல்லா இனங்களையும் அடிப் படைக்கவேண்டுமென்றும் மற்றையவர்களை எல்லாம் அடிமைகளாக்க வேண்டுமென்றும் இனவெறி கருத்துக்களை அள்ளி வீசினர். இந்த நார்டிக் இனத்தவரோடு ஏனைய செமடிக் இஸ்லாம் இனத்தவர் கலந்துகொண்டதுதான் நார்டிக் இனத்தின் வீரமும் துணிச்சலும் குறைந்து விட்டதற்கு காரணம் என்றார்

### தெய்வவாக்கு

இன உணர்ச்சியும் இன வெற்றியும் இல்லாத தேசியம் வெற்றிகரமாக ஜெர்மனியில் இயங்கமுடியாது என்று அவர் கருதினார் யூதர்களைப் போன்ற பணக்காரர்களும் நாகரிகத்தின் எதிரிகளும் ஜெர்மனியின் ஒற்றுமைக்கு தீங்கு விளைவிக்கும் சாதிக்காரர்களும் அந்நாட்டில் போற்றப்பட்டதால்தான் நார்டிக் இனத்தவரின் பெருமை குறைந்துவிட்டது என்றும் கூறினார்

இரண்டு இனங்கள் ஐக்கியமாகும்போது தரக்குறைவான இனம்தான் மேலோங்கி நிற்குமென்றும் அதனால் தான் நார்டிக் இனம் சிதைந்து விட்டதென்றும் நாஜிகள் கருதினர். அதனால் இனத் தூய்மையை பாதுகாக்கவும் அந்த இனத்திற்குண்டான- உயர்நிலையை - உரியநிலையை பெறவும் மற்ற இனத்தவரை அடக்கி ஆளவும் உலகெங்கும் சிறந்த நாடிக் பண்பாட்டை நிறுவவும் உலகையே ஆள வேண்டும் என்ற உணர்வை ஜெர்மனியர் மனதில் படிப்படியாக பதிய வைத்தார்,

ஹிட்லருடைய கருத்துக்களை தெய்வவாக்கெனகருதி அவரைக் கண் மூடித்தனமாகப் பின்பற்றி அவர் ஆணைப்படி மக்கள் எதுவும் செய்யத் தயாராய் இருந்தனர். ஜெர்மனியில் அவர் வெற்றி பெறக் காரணமாக இருந்ததே அவருடைய இந்த இனக் கொள்கையாகும் ஜெர்மனிய ஏகாதிபத்தியத்தை நிறுவவும் போருக்கு பிறகு சிதறிய ஜெர்மன் இனத்தவரை ஒன்று திரட்டவும் இந்த இனக்கொள்கை அவருக்கு மிகவும் உதவியாக இருந்தது.

இந்த உலகையே ஜெர்மனியர் ஆள வேண்டும் என்ற அவரின் அடங்கா ஆவலின் வெளிப்பாடாக இரண்டாம் உலக மகாயுத்தம் ஆரம்பமாயிற்று. அதிகாரம் ஒரு முகப்படுத்தப்பட்டு தனிநபர் ஒருவரின்:- ஹிட்லரின் கைக்கு அதிகாரம் கைமாறியது மாற்றுக் கருத்துக்கள் சிந்தனைகள் யாவும் சிதைக்கப்பட்டன. அவரை சாராத நாட்டு மக்கள் அவற்றுக்காக சிறையில் தள்ளப்பட்டனர்.

கெஸ்டாபோ(Gestpo)என்ற இரகசிய பொலிஸ் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. சிறிதளவு சந்தேகத்திற்குரியவர்களும் விசாரணை இன்றி அடைக்கப்பட்டனர்.

பத்திரிகைகள் கடும் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டன. பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கற்பிக்கப்படும் பாடங்கள் நாஜிக் கொள்கைகளை தழுவியதாகவே இருக்க வேண்டும் என்பது வற்புறுத்தப்பட்டது. மக்களின்உரிமைகள் எல்லாம் கடமைகளாக மாற்றப்பட்டு அவை அனைத்தும் நாட்டின் நலன்களுக்குத்தான் பயன்படுத்தப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

### உஷார் நிலையில் படை

இவ்வாறு சொந்த நாட்டு மக்களை இன உணர்வாலும் அதிகாரத்தாலும்ஒற்றுமைப்படுத்திய ஹிட்லர் அடுத்ததாக ஜெர்மனியின் முப்படைகளையும் பலப்படுத்தினார். ஜெர்மனிய இராணுவமும் கடற்படையும் விமானப்படையும் எந்நேரமும் தயார் நிலையில் உஷார்படுத்தப்பட்டிருந்தது. இராணுவத் தளபாடங்கள் ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டன ஜெர்மனிய எல்லையை சுற்றி அரண் அமைக்கப்பட்டது. இவ்வாறு மக்களையும் நாட்டையும் ஒரு பெரும் யுத்தத்திற்கு தயாராக்கிய ஹிட்லர் அடுத்ததாக முதலாம் உலக மகாயுத்தத்தின்பின் கையொப்பமிடப்பட்டவோர்சேல்ஸ் உடன்படிக்கையின்நிபந்தனைகளை ஜெர்மனி ஏற்றுக் கொள்ளாதென அறிவித்தார்.

### யுத்தம் ஆரம்பம்

ஏற்கனவே சர்வதேச ஆயுத குறைப்பு மாநாட்டிலிருந்தும் சர்வதேச சங்கத்திலிருந்தும் ஜெர்மனியின் நாஜி அரசாங்கம் விலகி இருந்தது. பின்பு 1939 செப்டெம்பர் முதலாம் திகதியன்று ஜெர்மன் படைகள் போலந்தைத் தாக்கின. இதற்கு முன்னரே ஜெர்மனியின் முன்னேற்பாடுகளைக் கண்டு கொண்ட ஏனைய நாடுகள் தமக்கிடையே ஒப்பந்தங்களையும் சமரச உடன்படிக்கைகளையும் செய்து கொண்டிருந்தன.

ஜெர்மன்படைகள் போலந்தின் வோசா நகரின் மீது குண்டுமாரி பொழிந்ததோடு ஆரம்பிக்கப்பட்ட இரண்டாம் உலக மகா யுத்தம் ஆறு ஆண்டுகளின் பின் ஜெர்மனி 1947 மே 7இல்நிபந்தனையின்றி சரணாகதி அடையும் வரைநீடித்தது.

### தவறான கொள்கை

ஜெர்மனியே உலகை ஆள வல்ல நாடு என்ற தவறான கொள்கையின்மேல் கட்டி எழுப்பப்பட்ட அரசியல் ஆதிக்கம் உலகப் பரப்பெங்கும் பெருமளவு சேதங்களை விளைவித்து அடங்கியது. இப்போரினால் விளைந்த சேதங்களை மதிப்பிடுதல் என்பது கடினமானதே ஆகும்.

இப்போரில் இறந்தவர்களின் தொகை ஏறக்குறைய இரண்டரைக் கோடி. சுமார் மூன்றரைக் கோடி பேர் காயமுற்றிருப்பர். பெருந்தொகை மில்லியன்கள் ஆயுதத்திற்காகவும் போரிற்காகவும் செலவிடப்பட்டன ஜப்பானியா ஹிரோஷிமா. நாகசாகி நகர்கள் முற்றாக அழிந்து தரைமட்டமாகின. அவற்றின் தாக்கம் இன்றுவரை அம்மக்களின் வாழ்வியலோடு வாழ்ந்து வருவது ஒரு மறக்கமுடியாத —மறுக்கமுடியாத சோகம்

**யசோதா பத்மநாதன்**

மைலப்பூர், வெருகுறை தொகுதிகளுக்கான விடுதலைப்புலிகளின்

கான விபர அறிக்கை எதையும் மத்திய அரசிடம் ஒப் படைக்கவில்லை எனக் குற்றம் சாட்டினார். ஆனால் அது ஜனவரி மாதத்திலேயே அனுப்பப் பட்டு விட்டது என்பதோடு, அதன் பின்னர் தமிழக புல னாய்வுத்துறை அதிகாரிகளே டில்லிக்கு வந்து விளக் கம் அளித்துள்ளதாகவும் ஜெயலலிதா தெரிவித்துள் ளார்.

இவ்வாறு மோதல் நிலை வலுவடைந்த நிலையில் இவ்விவகாரத்தில் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் பேசாமல் இருப்பது பற்றி ஜெயலலிதா கேள்வி எழுப் பினார். இதில், ராஜீவ் காந்தியின் தியாகத்தின் மூலம் பதவிக்குவந்தவர் மௌனம் சாதிப்பதுஏன் என்றரீதியில் காட்டமாகச் சாடியுள்ளார். இதேசமயம், மத்திய உள் துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் செயற்பாட்டை கட்டுப் படுத்த தமிழக அரசே நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசைக் குற்றம் சாட்டுவதை விட்டு புலிகளுக்கு எதிராகத் தீவிர நடவடிக்கையில் இறங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

அதாவது, இரு தரப்பும் புலிகளுக்கு எதிராக நட வடிக்கை எடுக்கவும், அவர்கள் மீதுள்ள தடையை நீடிக்கவுமே விரும்புகின்றனர். ஆனால், கடந்த முறை இரு தரப்பினருமே (அ. தி. மு. க - காங்கிரஸ்) இணை ந்து புலிகளைத் தடை செய்ய வேண்டும் என தீர்மா னம் எடுத்தனர் ஆனால் இம்முறை அவ்வாறு எடுக்க முடியாது கடந்த முறை இரு தரப்பினருமே அன்னியோ ன்னியமாக நெருக்கமாக இருந்தார்கள். இருவருக்கும் லாபம் என்ற முறையில் ஒற்றுமையாக தடைசெய்தனர் இம்முறை இரு தரப்பிற்கும் இடையில் உள்ள முரண் பாடால் தேவையில்லாத பிரச்சினை ஒன்றை உருவாக்கி மோதி வருகின்றனர்.

சுருக்கமாகக் கூறின் தமது பிரச்சினைகளுக்கு விடுதலைப் புலிகள் பெயரை இழுத்து விட்டுள்ள னர். கடந்த காலத்திலும் இதையே செய்து விடுதலைப் புலிகள் மீது தடை விதித்தனர். ஆனால், முன்னர் கூட்டாகச் செய்தனர். தற்பொழுது தனித்தனியாகச் செய்யுமாறு கோருகின்றனர். அதாவது, தமது அர சியல் லாபத்திற்காக விடுதலைப் போராட்டத்தை நடத் தும் ஓர் இனத்தை பகடைக் காயாக்க அவர்கள் முற்பட் டுள்ளனர்.

இந்த வகையிடுலயே தமிழகத்தின் சட்டம் ஒழுங்கை விடுதலைப் புலிகள் சீர் கெடுக்கின்றார்கள், ராஜீவ் காந்தி கொலையில் இலங்கைத் மிழர்கள் மீது தமிழக மக்கள் வெறுப்பாக இருக்கின்றனர் என்ற அரசியல் வாதிகளின் பேச்சை நோக்க வேண்டும் இவற்றில் அனேகமானவை அரசியல் வாதிகள் கிளப்பும் புரளியா கும். இது மயிரில்லாதவன் தலையில் மொட்டை வழித்த மாதிரியாகும். மற்றவர்களின் துயர்களில் தாம் ஆட்சி கட்டில் ஏற மேற்கொள்ளப்படும் நடவடிக்கையும் ஆகும்.

### மைலாப்பூர், பெருந்துறை தொகுதிகளுக்கான

# இடைத்தேர்தல் வேட்புமனு இன்று முதல் ஏற்கப்படும்

(சென்னை)

பெருந்துறை மற்றும் மைலாப்பூர் சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்களுக்குரிய வேட்பு மனுக்கள் இன்று முதல் ஏற் றுக் கொள்ளப்படவுள்ளன.

அடுத்த மாதம் மூன்றாம் திகதி வரை வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட இருப்ப தாகவும், நான்காம் திகதி மனுக்கள் பரிசீலிக்கப்படும் எனவும், மனுக்களைதிரும்பப் பெறுவதற்கான கடைசிநாள் ஆறாம் திகதி எனவும் வாக் குப்பதிவு 26-ம் திகதியன்று காலை ஆறு மணி முதல் பிற் பகல் ஐந்து மணி வரை நடை பெறுமெனவும் தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது.

# மருத்துவ மனையில் வைத்து 170 நோயாளர் படுகொலை

### றுவாண்டாவில் சம்பவம்

(இகாலி)

றுவாண்டாவின் தெற்குப் பகுதியிலுள்ள மருத்துவமனை யொன்றில் சுமார் 170க்கும் அதிகமானோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்த மருத்துவ மனையில் இருந்த எல்லா நோயாளர்களும், பணி யாளர்களும் கொலையுண்டி ருப்பதாக அயல்நாடான புருண்டியில் இருந்து கிடைக் கும் தகவல்கள் தெரிவிக்கின் றன.

இதேவேளை தன்சானியா வில் நடைபெறவிருந்த பேச்சு வார்த்தைகளும் இடம்பெற வில்லையெனக் கூறப்படுகின் றது

# தென்னாபிரிக்க தேர்தல் வாக்குப்பதிவு ஆரம்பம்

(ஜொகானஸ்பர்க்)

தென் ஆபிரிக்காவில் இனப் பாகுபாடற்ற வகையில்நடை பெறவுள்ள முதலாவது தேர் தலுக்கான வாக்குப்பதிவுகள் இன்று முதல் ஆரம்பமாகவுள் ளது- இத் தேர்தலுக்கான பிரசாரங்கள் நேற்று முன் தினம் நள்ளிரவுடன் முடிவு க்கு வந்துள்ளது இந்த தேர் தலுக்கான வாக்குப்பதிவு மூன்று தினங்கள் நீடிக்கும்

இதேவேளை நேற்று முன் தினம் ஆபிரிக்க தேசிய காங் கிரஸ் தலைமை அலுவலக மருகே குண்டு வெடிப்பு ஒன்று இடம் பெற்றதும் அதில் ஏழு பேர் கொல்லப்பட்டதுடன் தொண்ணூறுக்கும் அதிகமா னோர் காயமடைந்ததும் தெரிந்ததே.

மேலும் தேசிய ஒருமைப் பாடு, சமாதானம் மற்றும் சம ரச உணர்வுக்காக வன்முறை யை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலாவும் சூலு இன்காதா கட்சித்தலை வர் புத்தலேசியும் தத்தம் உரைகளில் கோரிக்கை விடு த்துள்ளனர்.

# விடுதலைப்புலிகளின் செயற்பாட்டை மாநில அரசே கட்டுப்படுத்தவேண்டும்

### - மத்திய அமைச்சர் ராஜேஷ் பைலட்

(சென்னை)

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு தமிழக அரசே நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மத் திய அமைச்சர் ராஜேஷ் பைலட் தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத்தில், நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய உள்நாட் டுப் பாதுகாப்புத்துறைஇணை அமைச்சர் ராஜேஷ் பைலட் மேலும் கூறுகையில் மத்திய அரசின் மீது ஆதாரமற்ற குற் றச்சாட்டுக்களை அள்ளிச் சுமத்துவதற்கு பதிலாக தமி ழக அரசு கடுமையான நட வடிக்கைகளை எடுக்க வேண் டும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் மாநிலத்தில் புலி களின் நடவடிக்கைகளைக்கட் டுப்படுத்துவதில் மத்திய அரசு ஒத்துழைப்பு வழங்கஎன்றுமே பின்தங்கியதில்லை எனவும், முதல்வர் ஜெயலலிதா இது விடயத்தில் தெரிவித்த கருத் துக்கள் கண்டிக்கத்தக்கவை எனவும், மத்திய அரசின்மீது குற்றம் சுமத்துவதற்கு பதி லாக கடுமையான நடவடி க்கை எடுத்து தீவிரவாத நட வடிக்கைகளை அறவே கட் டுப்படுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்

# வட அயர்லாந்தில் ஒபரேஷன் மடோனா

### பிரிட்டிஷ் பொலிசார் தேடுதல்

(லண்டன்)

பிரிட்டன், வடஅயர்லாந்து ஆகிய இடங்களில் உள்ள 41 கட்டடங்களை பொலிசார் முற்றுகையிட்டு தேடுதல் நட த்தினர் இதன் போது 8 பேர் கைது செய்யப்பட்டனர்.

இம்முற்றுகையின் போது கணிசமான அளவு பணம், மற் றும் பொருட்கள், கம்பியூட்ட ர்கள், நீதித்துறை குறித்த ஆவணங்கள் என்பவற்றை பொலிசார் கைப்பற்றினர்.

ஒருவருட விசாரணைகளை தொடர்ந்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இத ற்கு ஒபரேஷன் மடோனா எனப் பெயரிடப்பட்டது.

பிரிட்டிஷ் ஆட்சியை எதிர் த்து ஐ-ஆர்-ஏ கடந்த 25 வருடங்களாக யுத்தம் நடத்தி வருகிறது, இவர்கள் தமக்கு தேவையான ஆயுதங்களை வாங்க இப்பொருட்களை திரு டியிருந்ததாக பிரிட்டிஷ் பொ லிசார் தெரிவித்தனர்

**இயற்கை எம் உடமை - அதைக் காப்பது நம் கடமை**

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994. 04. 26 செவ்வாய் இரவு

08.01 ற்கு- ''ஊர் சுற்றும் ஒலிவாங்கி''
08.10 ற்கு- ''அறிந்துகொள்ளுங்கள்'' தகவல் களஞ்சிய நிகழ்ச்சி
08.20 ற்கு- நலந்தனா - ''இன்றைய சூழ்நிலையில் முதலுதவிகள் அவசியம் பற்றிய சில அறிவுரைகள்''
08.30 ற்கு - செய்திகள்
08.40 ற்கு-கருத்துக் களம்- ''மிரட்டல்''
08.50 ற்கு - தந்தை செல்வா நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''கொண்ட கொள்கை தவறாத தந்தை செல்வா''

1994. 04. 27 புதன் காலை

07.02 ற்கு- மாவீர வணக்கம்
07.15 ற்கு- நீங்கள் கேட்டவை
07.30 ற்கு - செய்திகள்
07.35 ற்கு - பத்திரிகைச் செய்திகள்
07 40 ற்கு - தொடர்ந்து நீங்கள் கேட்டவை.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# சிறிய நாடுகளுக்கு ஆயுத விற்பனை மேற்கு நாடுகள் தீவிர அக்கறை

## ஆசியான் அமைப்பு கண்டனம்

(கோலாலம்பூர்)

அதிக அளவு ஆயுதங்களைச் சிறிய நாடுகளுக்கு விற்பனை செய்வதற்குமேற்கு நாடுகள் முயற்சி செய்து வருவதாக ஆசியான் எச்சரிக்கை செய்துள்ளது.

இதற்கென பெருமளவு பணம் செலவிடப்படுகின்றது புறூணை, இந்தோனேஷியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகள் கூட்டாகச் சேர்ந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்காக வருடாந்தம் 900 கோடி அமெரிக்க டாலர்களை ஒதுக்குகின்றன. இதனால் ஆயுதத்தரகர்கள் கவரப்படுகின்றனர்.

இது பற்றி ஒவ்வொருவருக்கும் தெரியப்படுத்துவதனால் இதைத்தவிர்க்கலாம்- அத்துடன் பிரதேசப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்-

என மலேசியப் பாதுகாப்பு அமைச்சர் நஜீப்டுன் றஸாக் நிருபர்களுக்குத் தெரிவித்தார்.

நான்கு நாட்களாக நடைபெற்று வரும் ஆசியப் பாதுகாப்புச் சேவைகள் பற்றிய மாநாட்டில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, டென்மார்க், அவுஸ்ரேலியா, உட்பட நாற்பது நாடுகளைச் சேர்ந்த சுமார் ஐந்நூறு கம்பனிகள் பங்குபற்றுகின்றன.

# சதிக்குற்ற வழக்கில் சீதாராமையா விடுதலை

(டில்லி)

இந்தியாவின்பழையமாவோ தலைவர்களில் ஒருவராகக் கொண்ட சீதாராமையா பிரதான குற்றச்சாட்டு ஒன்றிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார் கம்யூனிஸ்ட் தீவிர மக்கள் யுத்தக்குழுவை ஸ்தாபித்த சீதாராமையா செகந்தராபாத் சதிக் குற்றத்தில் ஈடுபட்டிருந்தது நிரூபிக்கப் படவில்லை எனக் கூறி நீதிபதி அவரை விடுதலை செய்தார். ஆனால் மற்றும் மூன்று வழக்குகள் அவர் மீது இருப்பதால் சீதாராமையா சிறையில் தொடர்ந்து இருப்பார்.

விவசாயிகள் தலைவரான சீதாராமையாவும் மற்றும் 41 பேர்களும் கடந்த 1974 மேயில் இந்திய அரசையும் ஆந்திர மாநில அரசையும் வீழ்த்த சதி செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர் ஆனால் 20 ஆண்டுகள் பொலிசாரிடம் சிக்காமல் இருந்த சீதாராமையா 1993 இல் கைதானார். சிறையில் அவர் தற்போது நோயினால் பாதிப்புற்றுள்ளார்

# தாக்குதல்களை நிறுத்த இணக்கம்

பாலத்தீனிய விடுதலை இயக்கத்தை பதாஹ் அணியும், ஹமாஸ் அணியும் ஒருவரை ஒருவர் தாக்குவதை நிறுத்தி ஒரே அணியில் செயற்படப் போவதாக அறிவித்துள்ளன. பாலத்தீனியப் பகுதிகளில் இஸ்ரேலிய படைகளுக்கு எதிரானபலம்வாய்ந்த தாக்குதல் ஒன்றைகமாஸ்அணி அண்மையில் நடத்தியிருப்பது தெரிந்ததே.

# இந்திய தளபதி பங்களாதேஷ் விஜயம்

(டாக்கா)

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பி. எம். ஜோஷி உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு பங்களாதேஷ் சென்றுள்ளார். பங்களாதேஷ் இராணுவத் தளபதி முகமட் நூருதீன்கானை சந்தித்து இருதரப்புவிவகாரங்கள் பற்றிப் பேச்சு நடத்தியுள்ளார்.

# றுவாண்டாவில் யுத்த நிறுத்தத்திற்கு தன்சானிய முயற்சி தோல்வி

## தொடரும் மோதலால் ஒருலட்சம் பேர் பலி

தெற்கு றுவாண்டா ஆஸ்பத்திரியில் தங்கியிருந்த 176க்கும்அதிகமானோர் படுகொலை செய்யப்பட்டனர். கடந்த 20 நாட்களில் றுவாண்டாவில் ஒருலட்சத்துக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கலாம் என அறிவிக்கப்படுகிறது.

இந்த மாத முற்பகுதியில் றுவாண்டா ஜனாதிபதி ஹப்றிமானா கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து றுவாண்டாவில் மோதல்கள் ஆரம்பித்தன.

ஆஸ்பத்திரிக்குள் பிரவேசித்த துப்பாக்கி நபர்களும் இராணுவத்தினரும், நோயாளிகளையும் தாதிமாரையும் உதவியாளர்களையும் சுட்டுத் தள்ளினார்கள் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

சிறுபான்மை டுட்சி இனத்தைச் சேர்ந்த இவர்கள்மீது கைக்குண்டுகளும் வீசப்பட்டன. இரண்டு வாரங்களுக்கு முன்னர், கிளர்ச்சிப் படையினர் தலைநகர் மீது தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து அரசாங்க நடவடிக்கைகள் சீர்குலைந்தன. டுட்சி கிளர்ச்சிவாதிகள் தொடர்ந்தும் தாக்குதல்களை நடாத்தி வருவதனால் கிகாலியிலுள்ள அரசாங்க துருப்புகள் அவற்றின் ஒன்றிணைப்பை இழந்துள்ளன. றுவண்டாவில் ஹூடு பெரும்பான்மையினருக்கும் டுட்சி சிறுபான்மையினருக்கும் இடையில் பல தசாப்தகாலமாக இத்தகைய மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

கடைசியாகக் கிடைத்த அறிகைகள் யுத்த நிறுத்தப் பேச்சுவார்த்தைகளுக்கு இருதரப்பினரையும் அழைப்பதில் தன்சானிய சமரச பேச்சாளர்கள் தவறியுள்ளனர் என தெரிவித்துள்ளன. (முன்னையசெய்தி 5ஆம்பக்கத்தில்)

# மீண்டும் கிளர்ச்சி ஏற்பட இடமளிக்கக்கூடாது

இந்த அரசாங்கம்இன்னும் 3 மாத காலம் தான் இருக்கப் போகிறது அரசின்கடந்த கால நடவடிக்கைகள் மக்களின் அதிருப்தியைச் சம்பாதித்துள்ளன 1971 இல் ஏற்பட்டது போன்ற கிளர்ச்சிகள்மீண்டும் உருவாக்கும்விதத்தில் அரசுநடந்து கொள்ளக்கூடாது என மகிந்தராஜபக்ஸ கூறினார்,

1991 க்கு முன்னர் நாட்டில் காணமல் போனவர்கள் பற்றிய விசாரணைகள்நடைபெறுகிறதா? அப்படி நடப்பதாகஇருந்தால் அதனைப் பகிரங்கப் படுத்த வேண்டும் 60,000 பெற்றோர்கள் இதனை அறியஆவல் கொண்டவர்களாக இருக்கிறார்கள்,

சர்வதேச அமைப்புகளின் முன் தவறான தகவல்களை வெளியிடக்கூடாது.

அரசியல்வாதிகளை ஒழிக்கும் நடவடிக்கையும் இப்போது இடம்பெறுகிறது. மக்களின் வாக்குரிமையை அச்சமின்றி பயன்படுத்தும் சூழ்நிலையும் கூட இன்றில்லை. எனினும் அண்மைய தேர்தலில் மக்கள் துணிச்சலுடன் சென்று ஐ.தே. கவிற்கு எதிராக வாக்களித்தனர். இது ஐ. தே.கவிற்கு எதிர்காலத்தில் என்ன நடக்கப்போகிறது என்பதை காட்டுகிறது.

இந்நாட்டு மக்கள்இப்போது அவசர கால சட்டத்தின் கீழ் ஆளப்படுகிறார்கள் 17 வருடங்கள் இந்த நாட்டு மக்கள் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர் சட்டமும் ஒழுங்கும் திடீரென மாறுகிறது

பொலிசில் அடிவருடிகளுக்கே இடமளிக்கப்படுகிறது பதவி உயர்வுகளை வழங்கி பொலிசாரை வசப்படுத்திக் கொள்கின்றனர் லஞ்ச ஊழல் ஆணையாளர் திடீரென மாற்றப்பட்டுள்ளார் லஞ்ச ஆணையாளரின் பதவி பறிக்கப்படுகிறது

இந்நடவடிக்கைகள்கிளர்ச்சிகளுக்கே வழி வகுக்கும் என மேலும் அவர் கூறினார்

# ரொட்னி கிங்கிற்கு 38 லட்சம் டாலர் நட்டஈடு

கறுப்பர் இனத்தை சேர்ந்த வாகன சாரதியான ரொட்னி கிங்கிற்கு 38 லட்சம் டாலர் நட்டஈடாக வழங்கும்படி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

வெள்ளை இனப் பொலிசாரால் கடுமையாகத் தாக்கப்பட்ட ரொட்னிக் கிங் விவகாரம் அமெரிக்க வரலாற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதும், லொஸ் ஏன்சல்ஸ் பகுதி இனக் கலவரங்கள் ஏற்பட்டதும் தெரிந்ததே.

ரொட்னி கிங்கின் சட்டத்தரணி 1 கோடி 50 லட்சம் டாலர்களைநட்டஈடாககோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது,

# தென்னாபிரிக்க சூலு பிரதேச தனி ஆட்சிக்கு உத்தரவாதம்

சூலு ஆட்சிக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் இடைக்கால அரசியலமைப்பில் திருத்தங்கள் நேற்று தென்னாபிரிக்க பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன. சூலு இனத்தவர் வாழும் பிரதேசம் தொடர்ந்தும் தனிப் பிரதேசமாக இயங்குவதற்கு வழி செய்யும் வகையில் சட்ட முன்வரைவில் கொண்டு வரப்பட்ட திருத்தத்தை நேற்றுத் தென் ஆபிரிக்கப் பாராளுமன்றம் நிறைவேற்றியது.

தென் ஆபிரிக்கத் தேர்தலில் தாம் பங்குபற்ற சூலு பிரதேசத்தை ஒரு தனி பிரதேசமாக அங்கீகரிக்குமாறு இன்காட்டா சுதந்திரக் கட்சி நிபந்தனை வைத்தது தெரிந்ததே.

# முதன்மை

மருதங்கேணி:- ஆரம்ப ஆங்கிலம், தமிழ், சமூகக் கல்வி, ஆங்கிலம், விவசாயம், மனையியல், வர்த்தகம், கைப்பணி (எந்திரவியல்), கைப்பணி (கைவினை), சங்கீதம், நடனம், சித்திரம், இந்துசமயம், கிறிஸ்தவம் (றோ.க) கிறிஸ்தவம்(றோ.கஅல்லாத), உடற்கல்வி, வாழ்க்கைத் திறன், முறைசாராக்கல்வி, விசேடகல்வி.

பருத்தித்துறை:- ஆரம்ப ஆங்கிலம், விஞ்ஞானம், ஆங்கிலம், விவசாயம், மனையியல், வர்த்தகம், கைப்பணி (எந்திரவியல்), கைப்பணி (கைவினை), நடனம், சித்திரம், இந்துசமயம் கிறிஸ்தவம், (றோ. க), கிறிஸ்தவம்(றோ.க அல்லாத), உடற்கல்வி, வாழ்க்கைத்திறன், விசேடகல்வி, முறைசாராக்கல்வி.

சரவெட்டி:- ஆரம்ப ஆங்கிலம், வர்த்தகம், கைப்பணி (எந்திரவியல்), கைப்பணி (கைவினை), சங்கீதம், நடனம், றோ.க, கிறிஸ்தவம் (றோ.க அல்லாத), வாழ்க்கைத்திறன், விசேடகல்வி, முறைசாராக்கல்வி.

கோப்பாய்:- ஆரம்ப ஆங்கிலம், தமிழ், விவசாயம், கைப்பணி [எந்திரவியல்], கைப்பணி (கைவினை), சங்கீதம், நடனம், இந்து சமயம், கிறிஸ்தவம்[றோ க அல்லாத], உடற்கல்வி, வாழ்க்கைத் திறன், விசேடகல்வி, முறைசாராக்கல்வி.

# குண்டுவெடிப்பில் 10 பேர் பலி

[ஜொகனர்ஸ்பேர்க்]

தென்னாபிரிக்காவில் தேர்தல் நடைபெற்று வரும் இவ்வேளையில் நேற்றும் டாக்ஸி நிலையம் ஒன்றில் குண்டு வெடித்ததில் 10 கறுப்பினத்தவர்கள் பலியாகினர். நேற்று முன்தினம் நடைபெற்ற குண்டு வெடிப்பில் 9 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது. தேர்தலை குழப்பமுயலும் சக்திகளே இக்குண்டு வெடிப்புக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது

# பிரயாண ஒழுங்கு

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி

யாழ் உணவகங்கள்

# உள்ளூர் தானியங்களை பயன்படுத்தவேண்டும்

(நல்லூர்)

எமது பிதேசத்தில் உற்பத்தியாகும் தானியங்களைக் கொண்டு உணவு தயாரிப்பது சிறப்பு. வெளிநாட்டிலிருந்து கப்பலை எதிர்பார்க்கும் நிலையை மாற்ற உணவகங்கள் உள்ளூர் உற்பத்திப் பொருள்களிலிருந்து தரமான உணவு வகைகள் உற்பத்தி செய்தல் வேண்டும் என்று யாழ். மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் திரு. அருள்நேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் புறநிலைப் படிப்புகள் அலகு உணவகங்களின் முகாமைத்துவம் அடிப்படை கற்கைநெறி ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு கூறினார் புறநிலைப் படிப்புக்கள் அலகு இணைப்பாளர் திரு. இரா சிவசந்திரன் தலைமை தாங்கினார்.

# பிரபாகரனுக்

அஷ்ரப்பின் கடிதத்தின் நோக்கம் என அவர் மேலும் தெரிவித்தார்,

தென்மாகாணசபைத் தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து அரசியல் ரீதியாக ஏற்பட்டுள்ள பின்னடைவை ஐக்

# விளையாட்டில் அரசியல்

விளையாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக ஐ. தேக அரசியல்வாதிகளும், அரசாங்க முகவர்களும் செல்வாக்

மரண அறிவித்தல்கள்

## பொன்னையா நடராசா

[ஓய்வு பெற்ற புகையிரத நிலைய - பம்பர் (PUMPER காங்கேசன்துறை]

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னையா நடராசா 25 4-1994 அன்று காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மகனும், தனபாக்கியத்தின் அன்புக் கணவரும், தவராஜா (கனடா), றங்கராஜா (லங்கா சீமெந்து நிறுவனம்), யோகராஜா (ஜேர்மனி) இவர்களின் அன்புத் தந்தையும், கிளேறா(கனடா), சஜேனிதேவி, சரோ (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிறஞ்சினி (கனடா), தினேஸ்கரன், சாருஜா, சந்துஜா ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை இன்று 26-4-1994 பி.ப 2 மணிஅளவில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார்,

திறன், விசேடகல்வி, முறை சாராக்கல்வி.

உடுவில்:- ஆரம்ப ஆங்கிலம், ஆங்கிலம், மனையியல், வர்த்தகம், கைப்பணி (எந்திரவியல்), கைப்பணி(கைவினை) நடனம், சித்திரம், கிறிஸ்தவம் (றோ. க), வாழ்க்கைத்திறன், விசேடகல்வி, முறை சாராக் கல்வி.

தெல்லிப்பளை:- ஆரம்ப ஆங்கிலப், ஆங்கிலம், மனையியல், வர்த்தகம், கைப்பணி (எந்திரவியல்), கைப்பணி (கைவினை), நடனம், சித்திரம், கிறிஸ்தவம் (றோ.க), கிறிஸ்தவம் (றோ.கஅல்லாத) வாழ்க்கைத்திறன், விசேட கல்வி, முறை சாராக்கல்வி.

சண்டிலிப்பாய்:- ஆரம்ப ஆங்கிலம், தமிழ், விவசாயம், மனையியல், வர்த்தகம், கைப்பணி (எந்திர வியல்), கைப்பணி (கைவினை), சங்கீதம், சித்திரம், இந்துசமயம், கிறிஸ்தவம் (றோ க), கிறிஸ்தவம் (றோ. க அல்லாத), உடற் கல்வி, வாழ்க்கைத்திறன், விசேடகல்வி, முறைசாராச் கல்வி.

சங்கானை:- ஆரம்ப ஆங்கிலம், ஆங்கிலம், விவசாயம், வர்த்தகம், கைப்பணி (எந்திரவியல்), கைப்பணி (கைவினை) சங்கீதம், நடனம், கிறிஸ்தவம் (றோ. க), கிறிஸ்தவம் (றோ. க அல்லாத), உடற் கல்வி, விசேடகல்வி, முறை சாராக்கல்வி.

---

## குடிபோதையில்

த்தை நிறுத்தி விட்டு கடைக்குச் சென்று வரும்போது குறிப்பிட்ட நபர் பையொன்றில் நிரம்பிய மீன்வகைகளை திருடிக் கொண்டு செல்ல முற்படுகையில் அயலவர்களின் உதவியுடன் சாரதி குற்றவாளியைப் பிடித்து பார்துபாய் பொலிசாரிடம் கையளித்தனர்.

---

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி கல்விக்கழக ஆசிரியர்களுக்கு இன்று செவ்வாய்க்கிழமை வழமைபோல் படகுச்சேவை நடைபெறுமாயின்கல்விக்கழக அலுவலகத்திற்கு 12.00 மணிக்கு முன்னர் வருகை தந்தால் பிரயாண ஒழுங்கு செய்து கொடுக்கப்படுமென பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## காற்றுவெளி வெளியீட்டு விழா

நிதர்சனம் தயாரிப்பான ''காற்றுவெளி'' வீடியோ முழு நீளப்பட வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 5 00 மணிக்கு யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

---

## ராணுவத்தின்

பட ஏழு பட்டாலியன்களும் ஐந்து தொண்டர் பிரிவு பட்டாலியன்களும் இராணுவ அதிரடிப்படையினர், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் என்ற படைப்பிரிவுகள் சேவையிலீடுபட்டிருந்தன.

---

## இந்திய

பெற்றுத் தருவதாகக் கூறும் தரகர்கள், ஏமாற்றுப் பேர்வழிகள் அப்பாவி மக்களை ஏமாற்றிப் பணம் பறிப்பவர்களாவர்.

இந்தத் தரகர்கள் மோசடிப் பேர்வழிகளிடமிருந்து சிலர் போலி விசாக்களைப் பெற்றுள்ள சம்பவங்கள் பற்றியும் புகாரிடப்பட்டுள்ளது. போலி விசாக்களுடன் இந்தியா செல்பவர்கள் அங்கிருந்து திருப்பி அனுப்பப்படுவர் என உயர்ஸ்தானிகராலயம் எச்சரித்துள்ளது.

---

ந்து அரசியல் ரீதியாக ஏற்பட்டுள்ள பின்னடைவை ஐக்கிய தேசியக் கட்சி கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு மூலம் மீளப்பெற முயல்கிறது வடக்கினையும் கிழக்கையும் சர்வசன வாக்கெடுப்பின் மூலம் பிரித்துவிட்டால் இழந்துவிட்ட செல்வாக்கினை மீளப் பெறலாம் என ஐக்கிய தேசியக் கட்சி நினைக்கிறது இந்நிலையில் முஸ்லிம்களின் முதன்மையை உணர்ந்து கொண்ட அஷ்ரப் இப்படியான ஒரு கடிதத்தை எழுதியுள்ளார்.

எதிர்கால அரசியல் நடவடிக்கையில் முஸ்லிம்களும் தமிழர்களும் ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டும் என அவர் விடுத்துள்ள வேண்டுகோளானது அரசை மிரட்டிதான் இலாபம் பெறுவதேயாகும் என எல்மோ, பெர்னாண்டோ தெரிவித்தார்,


யாழ் ஸ்ரீதர் திரையரங்கில்

SYLVESTER-
STALLONE

நடித்த

RAMBO

தினசரி மாலை
4.00, 6.00
சனி, ஞாயிறு காலை
10.30
மாலை
4.00, 6-00 மணி

பெப்ரவரி 94

ஒளிவீச்சு

சனி, ஞாயிறு பி பகல்
2-30 மணிக்கு
காண்பிக்கப்படும்
(சி-9250)


இணைப்பாளர் திரு. இரா சிவசந்திரன் தலைமை தாங்கினார்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு வெ பொ. பாலசிங்கம் பேசுகையில், வெளிநாடுகளில் உணவு தயாரித்தல், உணவகங்களை நடத்துதல் போன்றவற்றிற்கு ஒரு பயிற்சியைப் பெற்றபின்னரே செய்யமுடியும். சுமார் ஆறு மாதப் பயிற்சி ஐரோப்பிய நாடுகளில் உள்ளது. அதுபோல் இங்கும் ஒரு கற்கை நெறியை ஆரம்பிப்பது நல்லது. நாமும் உணவகங்களுடன் தொடர்பான கற்கை நெறியைப் பயின்றவருக்கே லைசென்ஸ் வழங்கும் முறையை அறிமுகப்படுத்த யோசிக்கின்றோம். உணவகங்களின் முகாமைத்துவம் எமது சமூகத்துக்கு நன்மை பயக்கும் என்பது திண்ணம் என்றார்.

---

## செட்டிகுளத்

வத்தினர் குவிக்கப்பட்டு வந்தனர். அனுராதபுரத்திலிருந்து 20 பஸ்களில் படையினர் இப் பகுதிக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா இராணுவ முகாம்களிலிருந்து கவச வாகனங்கள் செட்டிகுளத்திற்கு சென்றுள்ளன. இரு முனைகளில் படையினர் முன்னேற தயாராக இருப்பதாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வவுனியா விமானப்படை தளத்திலிருந்தும் படையினர் செட்டிகுளம் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

நேற்று இராணுவத் தளபதி செட்டிகுளம் பகுதிக்கு விஜயம்செய்தார். இதே சமயம் அம்பாறையில் 'வைற் ஈகிள்' என்ற பெயரிலான இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அரசியல்வாதிகளும், அரசாங்க முகவர்களும் செல்வாக்குச் செலுத்த முனைவது குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சித்தலைவிசிறிமாவோபண்டாரநாயக்கா கண்டனம் தெரிவித்துள்ளார்.

சார்ஜாவில்விளையாடுவதற்கானகிரிக்கெட் குழுவின் தெரிவு தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சைகள் விளையாட்டுகளில் ஐ. தே. க, அரசியல்வாதிகளும் அரசாங்க முகவர்களும் கொண்டுள்ள செல்வாக்கினால் நாட்டில் ஏற்பட்டுள்ள திருப்தியற்ற நிலையை எடுத்துக் காட்டுகிறது- விளையாட்டில் அரசியல் தலையீடு தீங்கு விளைவிக்கும்- இப்பொழுது கிரிக்கெட் குழுவிற்கு ஏற்பட்டுள்ள கதியானது அரசியல் தலையீட்டின் விளைவாகும்- என சிறிமாவோ பண்டாரநாயக்கா மேலும் தெரிவித்தார்.

---

## அகதிகள்

களுக்கு இருப்பிடவசதியோ, மருத்துவ வசதியோ வழங்கப்படவில்லை என்றும் இவ்வாறு அழைத்துவரப்பட்ட அகதிகள் தற்போது எங்கு மீளச்சென்று குடியேறினார்கள் அவர்களின் முகவரி போன்றவை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்திற்கு முழுமையாக கிடைக்கவில்லை என்றும் தெரியவருகின்றது.

(நி) (க)

---

## கொடிய

களால் இந்த வகைப் பாம்பு கடித்தவர்களுக்குசிகிச்சையளிக்க முடியாது. இந்தியாவில் சேலம் நிலையத்தினர் தயாரிக்கும்விசமுறிவும் இவர்களைக் குணப்படுத்த போதுமானவையல்ல.

இந்தப் பாம்பினால் தீண்டப்பட்டவர்களில் 85 சதவீதமானோர் ஆண்பாம்பினால் தீண்டப்பட்டவர்கள் எனக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

---

ரின் ஈமக்கிரியை இன்று 26-4-1994 பி ப2 மணிஅளவில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்.

ந றங்கராஜா
[மகன்]

தற்போதைய முகவரி,
புகையிரத, நிலைய முகாம்,
சுண்ணாகம். (8132)

---

## கந்தையா குமாரசுவாமி

[ஓய்வுபெற்ற தபால் ஊழியர் உரும்பராய்]

கோண்டாவில் வடக்கு அன்னங்கையைச் சேர்ந்த கந்தையா குமாரசுவாமி 25-4-94 மாலை6.00 மணிக்கு காலமாகி விட்டார். இவர் கந்தையா செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும், பரம்சோதியின் அன்புக்கணவரும், கு. மோகனகுமார் (பஃறெயின்), கு. ஸ்ரீகுமார் (கனடா), கு.விஜயகுமார் (கனடா), கு.இராஜகுமாரி, கு. சாந்தகுமாரி, கு. உசாகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு க. தர்மலிங்கம், ந.தங்கச்சியம்மா, சு. பவளம், க. பொன்னம்பலம், து. கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் திரு நமசிவாயம் இராசம்மா தம்பதியினரின் மருமகனும் திரு மா. காங்கேசு, மா. யோகராசா, மா.இராசேந்திரம், மா.ஜெயராசா, மா தவராசா, ந. சந்தானலட்சுமி, செ நிந்தலட்சுமி, ச. பாக்கியலட்சுமி, வி. நவமணி, சி. கமலாவதி, ச. ஸ்ரீதேவி, சு. துரைராசா, வே. நல்லதம்பி, மு. சுப்பிரமணியம், திருமதி த. இரத்தினம்மா, பொ. மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோண்டாவில் வடக்கு கோகுலவீதியில் ''இராஜநிழல்'' எனும் அன்னாரது இல்லத்தில் 26-4-94 இன்று பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று, டிப்போ அருகாமையில் உள்ள கொட்டடக்காடு மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

கோகுலவீதி, திருமதி கு. பரம்சோதியும்
கோண்டாவில் வடக்கு, (ஈஸ்வரி)
கோண்டாவில். (8133) பிள்ளைகளும்

---

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.